# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1921/66 - 2015 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2015.07.03

1921/66 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பாளர்களுக்கான நியதிச் சட்டம்*

*மேல் மாகாண மாகாண சபையின் முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு, பொறியியல் சேவை மற்றும் தகவல் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 2015 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பாளர்களுக்கான நியதிச் சட்டம் தொடர்பில் மேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநர் அவர்களின் சம்மதத்தின் பேரில் 2015.06.09 ஆந் திகதி தொடக்கம் இந்நிதி நியதிச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரும்படி இங்கு பிரகடனப்படுத்துகின்றேன்.*

*பிரசன்ன ரணதுங்க,*
*முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு, பொறியியல் சேவை மற்றும் தகவல் அமைச்சரும்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*மேல் மாகாண முதல் அமைச்சர் அலுவலகம்,*
*"சிராவஸ்தி மந்திரய",*
*கொழும்பு 07,*
*2015, யூலை 03.*

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பாளர்களுக்கான நியதிச் சட்டம்*

*வங்கி ஒன்றினால் மேற்கொள்ளப்படும் பொருட்களை அடகு பிடிக்கும் நடவடிக்கைகளைத் தவிர பொருட்களை அடகு பிடிப்பாளர்களுடைய தொழில் முயற்சியை ஒழுங்குபடுத்துவதற்காகவும் அதனோடு தொடர்புடைய வேறு விடயங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துவதற்காகவும், 2001 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பாளர்களுடைய நியதிச்சட்டத்தினை இல்லாதொழிப்பதற்கான நியதிச்சட்டம் ஒன்றாகும். இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1942 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பாளர்களுடைய நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இயைபற்றதாகும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது.

**அத்தியாயம் I**

பொது

1. இந்நியதிச் சட்டம் மேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பாளர்களுக்கான நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன், மேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து நடைமுறைக்கு வரவேண்டும். *குறுந்தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.*

## அத்தியாயம் II

பொருட்களை அடகு பிடிப்பவர்களுடைய வியாபார நடவடிக்கையினை நடாத்திச் செல்ல தடையானவர்கள்

*பொருட்களை அடகு பிடிப்பதற்கான தொழில் செய்வதில் இருந்து சிலர் விலக்கப்பட்டுள்ளனர்.*

2. எந்தவொரு நபராவது -

(அ) இலங்கைப் பிரஜையாக இல்லாத நபரானவிடத்து ; அல்லது

(ஆ) வெளிநாட்டு கம்பனி ஒன்றாக இருக்குமிடத்து ; அல்லது

(இ) வெளிநாட்டு வியாபார ஸ்தாபனம் ஒன்றாகுமிடத்து ;

(ஈ) இந்நியதிச் சட்டத்தின் 10 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாகக் காணப்பட்டால் அல்லது தகைமை அற்றவராகக் காணப்பட்டால்

உரிய தினத்தில் அல்லது அதன் பின்னர், அந்நபரினால் பொருட்களை அடகு பிடிக்கும் தொழிலினை மேற்கொள்ளக்கூடாது.

## அத்தியாயம் III

பதிவு செய்தல்

*வியாபாரம் ஆரம்பமாக முன் பதிவு செய்யப்படவேண்டும் என்பது.*

3. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அடகு அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் ஒவ்வொரு நபரினாலும், தமது வியாபாரத்தினை ஆரம்பிக்க முன் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்து, இறைவரி ஆணையாளரிடமிருந்து அதற்குரிய பதிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*இறைவரி ஆணையாளருக்கு சத்தியக் கடதாசி ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்பது.*

(2) அவ்வாறு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பிப்பவரினால் விண்ணப்பப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில், தான் அதுவரை ஏதாவது சட்ட விரோதமான செயல் ஒன்றும் செய்யவில்லை என்பதற்கோ அல்லது அத்துடன் அவ்வகையான செயற்பாடு ஒன்றுக்கு குற்றவாளியாக காணப்படவில்லை என்பதற்கோ சத்தியக் கடதாசி ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டியதுடன் விண்ணப்பதாரி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்ட நபர் ஒருவர் அல்லது தமக்கு எதிராக வழக்கொன்று காணப்படும் நபர் ஒருவராயின் அவ்வழக்கிற்கு உரிய எல்லா தகவல்கள் அடங்கிய சத்தியக் கடதாசி ஒன்றை இறைவரி ஆணையாளருக்கு முன்வைக்க வேண்டும்.

## அத்தியாயம் IV

அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளல்

*பொருட்களை அடகு பிடிப்பாளர்களினால் அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது.*

4. (1) பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் ஒவ்வொரு வியாபார தாபனம் அத்துடன் அல்லது கிளையொன்றுக்காகவும், அந்த ஒவ்வொரு வியாபார நிலையம் அத்துடன்/அல்லது கிளைக்காக இறைவரி ஆணையாளரினால் வெவ்வேறாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று அதை நடாத்துபவரின் பெயரில் இருந்தாலொழிய வேறு எந்தவொரு நபரினாலும் பொருட்களை அடகு பிடிக்கும் நிலையத்தினைப் பேணிச் செல்லலாகாது.

(2) மேலே (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்படும் "அ" படிவத்திற்கு இணங்கியதாக வேண்டும்.

(3) மேலே (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் இங்கு குறிப்பிடப்படும் வியாபார நிலையத்திற்கு ஒரு பஞ்சாங்க ஆண்டுக்கு மட்டும் செல்லுபடியானதாக வேண்டும்.

*அனுமதிப்பத்திரம் ஒன்றின் ஒரு பிரதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அனுப்பப்படவேண்டும் என்பது.*

5. மேலே 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தினதும் ஒரு பிரதி அந்த அனுமதிப்பத்திரத்திற்கு உரிய அடகு பிடிக்கும் வியாபாரம் ஏதாவது பிரதேசத்தில் நடாத்தப்பட்டால், அப்பிரதேசத்திற்கு பொறுப்பாக உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இறைவரி ஆணையாளரினால் அனுப்பப்பட வேண்டும்.

*இறைவரி ஆணையாளரின் முன் அனுமதியில்லாத அனுமதிப்பத்திரத்தைக் கையளிப்பது சட்ட ரீதியற்றதாகும் என்பது.*

6. மேலே 4 ஆவது பிரிவின் (1) உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று ஏதாவதொரு அடகு பிடிக்கும் வியாபாரத்திற்கு உரியதாயின், அவ் அனுமதிப்பத்திரத்தை இறைவரி ஆணையாளரின் எழுத்து மூலமாக அங்கீகாரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளாது வேறு நபருக்கு கையளிப்பது செல்லுபடியற்றது மற்றும் அதிகாரம் அற்றதாகும்.

*அனுமதிப்பத்திரத்திற்காக வேண்டுகோள்விடுத்தல்.*

7. (1) பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வதற்காக அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் ஒவ்வொரு நபரினாலும்,

(அ) அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் அளவில் அது வரையில் தான் ஏதாவதொரு சட்ட விரோதமான அத்துடன்/அல்லது ஏதாவது முறைகேடான செயற்பாடொன்று மேற்கொள்ளவில்லை என்பதற்கு அல்லது/ அத்துடன்

அவ்வாறான நடவடிக்கைக்கு குற்றவாளியாக காணப்படவில்லை என்பதற்கு சத்தியக் கடதாசியொன்று அல்லது விண்ணப்பித்தவர் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக காணப்பட்ட நபர் ஒருவர் அல்லது தமக்கு எதிராக வழக்கொன்று காணப்படும் நபர் ஒருவராயின் அவ் வழக்கிற்கு உரிய எல்லா தகவல்களையும் உள்ளடக்கிய சத்தியக் கடதாசி ஒன்று; அத்துடன்

(ஆ) வியாபாரப் பெயர் பதிவாளர் சான்றிதழ் அல்லது அது கூட்டுத்தாபனம் ஒன்றாயின் கூட்டுத்தாபனங்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பதிவு செய்த சான்றிதழ் அத்துடன் சட்ட ரீதியான சங்கம் ஒன்றாயின் அதன் யாப்பு ;

(இ) இந்நியதிச் சட்டத்தின் 8 ஆவது பிரிவிற்கிணங்க சமர்ப்பிக்கப்படவேண்டிய வருடாந்த கணக்கு அறிக்கையுடன் பொருட்களை அடகு பிடிக்கும் நிலையம் ஒன்றைவிட அதிகமான எண்ணிக்கை அல்லது அதன் கிளை ஒன்றைவிட அதிகமாகப் பேணிச் செல்லப்பட்டால், அவ் ஒவ்வொரு நிலையங்களுக்குமாக அல்லது அதன் கிளைகளுக்குமாக வெவ்வேறாக;

(ஈ) இந்நியதிச் சட்டத்தின் 27 ஆவது பிரிவிற்கிணங்க எடுக்கப்பட்ட காப்புறுதிச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று ;

(உ) இந்நியதிச் சட்டத்தின் 43 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் ஏற்பாட்டின் கீழ் தயாரிக்கப்பட்ட உறுதிப்பத்திரம் ஒன்று ; இறைவரி ஆணையாளரினால் நியமப்படுத்தப்பட்ட படிவத்திற்கிணங்கிய வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரதாரரினால் நடாத்தப்படும் பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்திற்குப் பதிலாக அடுத்துவரும் பஞ்சாங்க வருடம் ஒன்றுக்காக அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் வேளையில், காணப்படும் அனுமதிப்பத்திரம் இரத்தாகவுள்ள தினத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் உரிய விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(3) பொருட்களை அடகுபிடிக்கும் வியாபாரம் ஒன்றினை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் ஒன்றினைப் பதிவு செய்யும் போது அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவதற்காக அறவிடப்படவேண்டும் என 53 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அமைச்சரினால் பணிக்கப்பட்டுள்ள நிதி, உரிய பதிவுக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக 9 (2) உப பிரிவின் கீழ் பணிக்கப்பட்டுள்ள நிதி 9 (3) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க வைப்பில் இடப்பட வேண்டும்.

(4) வருடாந்த அனுமதிப்பத்திரத்தினை உரிய தினத்தில் புதிப்பிக்காது பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் பொருட்களை அடகு பிடிப்பாளருக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதாயின், அனுமதிப்பத்திரமின்றி பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு சென்ற ஒவ்வொரு வருடம் ஒன்றுக்காகவும் உரிய அனுமதிப்பத்திரக் கட்டணமும் அனுமதிப்பத்திரமின்றி பொருட்களை அடகுபிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு சென்ற ஒவ்வொரு மாதத்திற்காகவும் உரிய அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 10% வீதப்படி தாமதக் கட்டணமாக அறவிடப்பட வேண்டும்.

(5) வருடாந்த அனுமதிப்பத்திரத்தினை பெறாது பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் பொருட்களை அடகு பிடிக்கும் ஒருவருக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதாயின், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரமின்றி பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு சென்ற ஒவ்வொரு வருடம் ஒன்றுக்கும் உரிய அனுமதிப்பத்திரக் கட்டணமும், அனுமதிப்பத்திரமின்றி பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு சென்ற ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 20% வீதம் தாமதக் கட்டணமாக அறவிடப்பட வேண்டும்.

(6) விண்ணப்பதாரி அனுமதிப்பத்திரத்தினைப் பெறுவதற்காக இந்நியதிச் சட்டம் மற்றும் அதன் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள பிரமாணங்களில் குறிப்பிடப்படும் தேவைகளைப் பூரணப்படுத்தியிருந்தால் மற்றும் தகைமையற்றவராக காணப்படாதவிடத்து இறைவரி ஆணையாளரினால் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது நிராகரிக்கப்படக்கூடாது.

(7) ஏதாவது நபர் ஒருவரினால் பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வதற்காக, பொருட்களை அடகுபிடிக்கும் அனுமதிப்பத்திரத்திற்கு வேண்டுகோள் விடுக்கும் போது, அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதவிடத்து அவ்வாறு வழங்க முடியாமைக்கு உரிய தமது முடிவினைக் காரணத்துடன் அவ்வேண்டுகோள் கிடைக்கப்பெற்று 30 நாட்கள் நிறைவடையமுன் இறைவரி ஆணையாளரினால் விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

*அனுமதிப்பத்திரத் தினைப் பெற்றுக்கொள்ளும் போது வருடாந்த கணக்கு சமர்ப்பிக் கப்படவேண்டும் என்பது.*

8. ஏதாவது ஒரு பஞ்சாங்க வருடம் ஒன்றுக்காக அனுமதிப்பத்திரத்திற்கு வேண்டுகோள் விடுக்கும் பொருட்களை அடகு பிடிப்பவர் தனது அடகுபிடிக்கும் தொழிலுக்குரிய அதற்கு முன்னரான நிதியாண்டின் வருடாந்த கணக்கினை இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

*சில நபர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை தடை செய்தல்.*

9. (1) இந்நியதிச் சட்டத்தின் 2 ஆவது ஏற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதன் காரணத்தினால் பொருட்களை அடகு பிடிக்கும் தொழில் செய்யாது தடைசெய்யப்பட்ட எந் நபருக்கும், பொருட்களை அடகு பிடிப்பதற்கான தொழில் செய்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றைக் குறித்த திகதிக்கோ அல்லது பின்னரோ விநியோகித்தல் ஆகாது. தவறாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ அல்லது அவ்வகையான நபர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தால் அதன்படி சகல காரியங்களுக்கும் செல்லுபடியற்றதாக மற்றும் வலுவற்றதாக கருதப்பட வேண்டும்.

*அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் பிணை நிதி யினை நியமம் செய்தல்.*

(2) வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்பட வேண்டிய வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரதாரரினால் வைப்பில் இடப்படவேண்டிய வைப்புப் பணம் தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் 53 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி அமைச்சரினால் வர்த்தமானப் பத்திரிகையில் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(3) இறைவரி ஆணையாளரினால் வைப்பு நிதியினை வைப்பிலிடுமாறு அனுமதிப்பத்திரதாரருக்கு அறிவிக்கப்பட்டும் வைப்பு நிதி அல்லது மேலே (2) ஆவது உப பிரிவின் கீழ் நியமப்படுத்தப்பட்டுள்ளபடி வைப்பு நிதி பணிக்கப்படும் அரச வங்கியில் அனுமதிப்பத்திரதாரரினால் வைப்பிலிடப்பட வேண்டும். இறைவரி ஆணையாளரினால் வியாபாரம் மூடப்படும் போது அல்லது ஒப்படைக்கப்படும் வேளையினைத் தவிர வைப்பு நிதி அத்துடன்/அல்லது அதற்குரிய வட்டிப்பணம் வைப்பாளருக்கு மீண்டும் செலுத்தப்படலாகாது. எவ்வாறானபோதும், அனுமதிப்பத்திரதாரரினால் பொருளை அடகு வைத்தவருக்கு அல்லது வைத்தவர்களுக்கு ஏதாவது நிதி செலுத்தப்படவேண்டியிருப்பின் அந்நிதி வைப்பு நிதியில் அத்துடன் வட்டி நிதியில் இருந்து கழிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டும்.

*அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குதலை நிராகரிப்பது.*

10. பொருட்களை அடகு பிடிக்கும் ஒரு வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வதற்காக அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும்.

(அ) பொருட்களை அடகு பிடிக்கும் தொழிலினை மேற்கொண்டு செல்வதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கும் தினத்திற்கு முன்னரான ஐந்து வருட காலத்தினுள் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது குற்றவியல் கோவையின் XI, XIII, XVII அல்லது XVIII ஆம் அத்தியாயத்தின் கீழ் அல்லது அளத்தல் நிறுத்தல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டிருந்தால் அத்துடன்/அல்லது;

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் 7(1) ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களை சமர்ப்பிக்காத விடத்து அத்துடன்/அல்லது ;

(இ) இந்நியதிச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் கீழ் அந்நபர் வருடாந்த கணக்கு அறிக்கையினை சமர்ப்பிக்காத விடத்து அத்துடன்/அல்லது ;

(ஈ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது பொருட்களை அடகு பிடிக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழ் அந் நபருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று இந்நியதிச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்யப்பட்டிருந்தால் அத்துடன்/அல்லது ;

(உ) இந்நியதிச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவிற்கு இணங்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பெயர் பிரசுரிக்கப்பட்டிருந்த நபர் ஒருவராயின் அத்துடன்/அல்லது

(ஊ) அந்நபர் ஏல விற்பனையாளர் ஒருவராகும் இடத்து,

அவ்வாறான நபர் ஒருவருக்கு இறைவரி ஆணையாளரினால் பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்கக் கூடாது.

11. (1) இந்நியதிச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் ஒன்றை வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும் அவ் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தினுள் பொருட்களை அடகு பிடிப்பவராக தனது வியாபாரம் மற்றும் அது தொடர்பாக இந்நியதிச் சட்டம் அல்லது இந் நியதிச் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு முரணாக செயற்பட்டுள்ளார் என விசாரணையின் பின்னர் இறைவரி ஆணையாளர் திருப்திப்பட்டால் அவ் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்ய இயலும்.

அனுமதிப்பத்திரத் தினை இரத்துச் செய்தல்.

எவ்வாறான போதும் அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கு முன்னர் அனுமதிப்பத்திரதாரருக்கு அது தொடர்பாக அறிவிக்க வேண்டியதுடன் அதற்கு எதிராக விடயங்களைத் தெரிவிப்பதற்கு 30 நாட்களைக் கொண்ட காலம் ஒன்றினை வழங்க வேண்டும்.

(2) அடகுபிடிப்பாளர் ஒருவர் அத்துடன்/அல்லது அவரின் ஏதாவது சேவகர் ஒருவர் அத்துடன் / அல்லது முகவர் ஒருவர் அத்துடன்/அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவது தவறு ஒன்று தொடர்பாக அத்துடன்/அல்லது அவரின் வியாபாரத்தில் மேற்கொள்ளப்பட்ட மோசடி ஒன்று தொடர்பாக அத்துடன்/அல்லது களவாடப்பட்ட பொருட்கள் எனத் தெரிந்து கொண்டே களவாடப்பட்ட பொருட்களைப் பெற்றுக்கொண்டது தொடர்பாக அத்துடன்/அல்லது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து இறைவரி ஆணையாளரினால் அந்த அடகு பிடிப்பாளரின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட வேண்டும்.

12. (1) ஏதாவது அனுமதிப்பத்திரதாரரின் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்திருந்தால் அத்துடன் அடுத்துவரும் வருடத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்காவிடின் அந்த எல்லாப் பொருட்களை அடகு பிடிப்பாளர்களினதும் பெயர், வியாபாரத்தின் பெயர் மற்றும் அந்த வியாபாரம் மேற்கொள்ளப்படும் வியாபார ஸ்தாபனத்தின் முகவரி ;

இந்நியதிச் சட்டத் தின் கட்டளைகளை மற்றும் நிபந்தனை களை மீறும் அனு மதிப்பத்திரதார ரின் பெயர், முகவரி வர்த்தமானப்பத் திரிகை மற்றும் பத் திரிகைகளின் மூலம் வெளியிடப்பட வேண்டும் என்பது.

(2) இந்நியதிச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் தவறு ஒன்றுக்கு குற்றவாளியாகக் காணப்படுமிடத்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந் நபரினது பெயர், தனிப்பட்ட முகவரி, வியாபாரப் பெயர் மற்றும் அந்த வியாபாரம் மேற்கொள்ளப்படும் இடத்தின் முகவரி.

இறைவரி ஆணையாளரினால் வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பத்திரிகைகளில் விளம்பரம் ஒன்றின் மூலம் வெளியிடப்படவேண்டும்.

## அத்தியாயம் V

### அனுமதிப்பத்திரதாரரினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள்

13. மூன்று மாதங்களுக்கு அதிக காலம் இலங்கைக்கு வெளியில் இருக்க எண்ணும் ஒவ்வொரு, பொருட்களை அடகுபிடிப்பவரினாலும் அவ்வாறு வெளியில் செல்வது தொடர்பாக மாகாண இறைவரி ஆணையாளருக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டும். இலங்கைக்கு வெளியில் உள்ள காலத்தினுள் பொருட்களை அடகுபிடிக்கும் வியாபாரத்தின் தமது வேலைகளை மேற்கொண்டு செல்வதற்காகவும் தமக்காகச் செயற்படுத்தற்காகவும் பொருட்களை அடகுபிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்ல இந்நியதிச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள உரிமையுள்ள நபர் ஒருவரை பெயர் குறிப்பிட்டு, அது தொடர்பாக மாகாண இறைவரி ஆணையாளரின் எழுத்து மூலமான அங்கீகாரத்தினைப் பெற வேண்டும்.

பொருட்களை அடகு பிடிப்பவர் இலங்கைக்கு வெளியே உள்ள விடத்து அது தொடர் பாக அறிவித்தல்.

14. பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் ஒவ்வொரு நபரும் ஏலமிடுபவராக அல்லது ஏலமிடும் ஒருவரின் வியாபார நடவடிக்கையினை மேற்கொண்டு செல்வதனை மேற்கொள்ளக்கூடாது.

பொருட்களை அடகு பிடிப்பவர் ஏலமிடுபவராக செயற்படக் கூடாது என்பது.

15. ஒவ்வொரு அடகு பிடிப்பாளரினாலும் -

(1) தமது வியாபார நிலையத்திற்கு வெளியிலுள்ள கதவுக்கு மேலே தெளிவான எழுத்தில் தமது வியாபாரத்தின் பெயர் அடகுபிடிப்பாளராக பதிவு செய்யப்பட்ட பதிவிலக்கம் மற்றும் "அடகு பிடிப்போர்" என்ற சொற்களின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதி காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

அடகுபிடிப்பாளரினால் வியாபாரத்தின் பெயர், அனுமதிப் பத்திர இல. மற்றும் இரண்டாம் அட்ட வணையில் குறிப் பிடப்படும் விபரங் கள் காட்சிப்படுத் தப்பட வேண்டும் என்பது.

(2) மேலும் தமது வியாபார ஸ்தானத்திற்கு வருகை தரும் எல்லா நபர்களுக்கும் புலப்படுமாறு மற்றும் அந்த எல்லா நபர்களும் வாசிக்கக்கூடிய முறையில் இங்கு இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விபரங்கள் அடங்கிய விளம்பரம் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அந்த வியாபார தாபனத்தில் தெளிவாகத் தெரியும் இடத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

விபரங்களை உள்ளடக்குவதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய மொழி.

*16.* பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் ஒவ்வொரு நபரினாலும் ஏதாவது புத்தகம் ஒன்றில் அல்லது ஆவணத்தில் ஏதாவது விபரங்களை உள்ளடக்குவதற்கு இந் நியதிச் சட்டத்தில் பணிக்கப்பட்டுள்ள வேளையில், அவ் விபரங்களை சிங்களத்தில் அல்லது தமிழில் உள்ளடக்க வேண்டும் இதற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் உள்ளடக்கப்பட வேண்டும்.

அடகு பிடிப்பாளரினால் பேணப்பட வேண்டிய புத்தகங்கள்.

*17.* முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள “ஆ” படிவத்திற்கு இணங்க அடகுப் புத்தகம் ஒன்று மற்றும் “இ” படிவத்திற்கு இணங்க அடகு விற்பனைப் புத்தகமொன்று, ஒவ்வொரு அடகுபிடிப்பாளரினாலும் பேணப்பட வேண்டும்.

அடகுத் துண்டு மற்றும் அடகு பிடித்தல் இடம்பெறல்.

*18 (1)* ஒவ்வொரு அடகுத் துண்டும் இங்கு முதலாம் அட்டவணையில் “ஈ” படிவத்தில் காட்டப்பட்டுள்ள மூலப் பிரதியையும் அடியிதழ்கள் இரண்டினைக் கொண்டதாகவும், அப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்புகளுக்கு இணங்க எழுதிக் கையொப்பம் இடப்பட வேண்டும்.

(2) இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எல்லா அடகுத் துண்டுகளின் மூலப் பிரதிகளின் மறுபக்கத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வாசிக்கக் கூடிய முறையில் அச்சடிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(3) பொருளொன்றை அடகு வைக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் உரிய அடகுத் துண்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியின் பெறுமதிக்கு உரிய முத்திரை ஒட்டப்பட வேண்டும். அம்முத்திரைக்குச் செலவாகும் நிதி பொருட்களை அடகு பிடிப்பவரினால் பொறுப்பேற்கப்பட வேண்டும்.

(4) (அ) பொருட்களை அடகு வைப்பவரினால் அடியிதழில் கையொப்பம் இட்டாலொழிய; அத்துடன்

(ஆ) பொருட்களை அடகு பிடிப்பவர் அடியிதழில் கையொப்பம் இட்டு அதனை அடகு வைப்பவரிடம் வழங்கினாலொழிய ; அத்துடன்

ஏதாவதொரு பொருள் ஒன்றை அடகு பிடிப்பது இடம்பெற்றதாக கருதிக் கொள்ளக்கூடாது.

வட்டியின் அளவு

*19.* ஏதாவதொரு அடகு பிடிப்பாளரினால் அடகு ஒன்றின் கீழ் வழங்கப்படும் கடனுக்குப் பதிலாக, இரண்டாவது அட்டவணையில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்திற்கு மேலதிகமாக வட்டியொன்றை அறவிடப்படக்கூடாது.

எவ்வாறான போதும் அடகு ஒன்றின் கீழ் வழங்கப்படும் கடனொன்றுக்குப் பதிலாக ஏதாவதொரு வரி ஒன்று செலுத்தப்படவேண்டிய சந்தர்ப்பம் ஒன்றில், பொருட்களை அடகு பிடிப்பவரினால் பொருட்களை அடகு வைப்பவரிடமிருந்து அறவிடுவது, இப்பிரிவிற்கு முன்னால் உள்ள ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவதொன்றினால் தடை செய்யுமாறு கருதப்படக்கூடாது. இப்பிரிவில் “அடகு” என்பது, அடகு வைக்கப்பட்டு உரிய தினத்திற்கு முன்னர் மீட்டுக்கொள்ளாத அடகு ஒன்று என்பதே உள்ளடக்கப்படுகின்றது.

## **அத்தியாயம்** VI

அடகு

24 மாதங்களுள் அடகினை மீட்டுக் கொள்ள வேண்டும் என்பது.

*20.* ஒவ்வொரு ஈட்டு நடவடிக்கையும் அது அடகு வைக்கப்பட்ட தினத்தில் இருந்து 24 மாதங்கள் (இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “விடுவித்துக் கொள்ளும் காலம்” என்று குறிப்பிடப்படும்) காலத்தினுள் மீட்டுக் கொள்ளப்படல் வேண்டும். ஈடு வைக்கப்பட்ட தினத்தைத் தவிர்த்து இக்காலம் கணக்கிடப்பட வேண்டும்.

*21.* இந்நியதிச் சட்டத்தின் 20 ஆவது பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதும் ஒவ்வொரு அடகு நடவடிக்கையும் அது மீட்டுக்கொள்ளப்பட வேண்டிய கால எல்லையைத் தாண்டி இருந்தாலும் இந்நியதிச் சட்டத்தின் 29 ஆவது பிரிவின் ஏற்பாடுகளில் வழங்கப்பட்டுள்ளபடி அது அகற்றப்படும் வரை ஒவ்வொரு அடகு வைப்பாளருக்கும் ஈட்டினை விடுவித்துக் கொள்வதற்கு முடியும்.

அடகினை மீட்டுக் கொள்வதற்குரிய நடவடிக்கை.

*22. (1)* ஏதாவது அடகு ஒன்றுக்குரிய அடகுத் துண்டின் மூலப் பிரதி அடகு வைப்பவரினால் அடகு பிடிப்பவருக்கு ஒப்படைக்கப்பட்டு அடகு பிடிப்பாளர் அல்லது அவரின் முகவர் அல்லது அவரின் ஊழியரின் முன்னிலையில் மூலப் பிரதியில் கையொப்பமிட்டு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தினால் அந்த அடகினை மீட்டுக்கொள்ளும் உரிமை அவ் அடகு வைத்தவருக்கு உரித்தாகின்றது.

(2) பொருட்களை அடகு வைத்த ஒருவரல்லாத ஏதாவது நபர் ஒருவரினால் ஏதாவது ஈடொன்றுக்குரிய அடகுத் துண்டின் மூலப் பிரதியை அந்த அடகினை வைத்த நபரினது கையொப்பத்தினை உரிய முறையில் உறுதிப்படுத்தி அடகு பிடிப்பாளருக்கு சமர்ப்பித்தால் மற்றும் அந் நபரினால் பொருட்களை அடகு பிடிப்பவர் அல்லது அவரது முகவர் அல்லது சேவகர் முன்னிலையில் அந்த மூலப் பிரதியில் கையொப்பம் இட்டால் மற்றும் தமது அடையாளத்தை நிரூபித்தால் அந்த அடகினை மீட்டுக் கொள்ளும் அதிகாரம் அந்த நபருக்கு உண்டு.

(3) பொருட்களை அடகு வைத்தவரின் மரணத்தினால் அல்லது சட்டரீதியான செயற்பாட்டினால் அந்த அடகினை மீட்டுக் கொள்வதற்குரிய அதிகாரம் தமக்கு உண்டு என அடகுக்குரிய அடகுத் துண்டின் மூலப் பிரதி வைத்திருக்கும் நபரினால் குறிப்பிடப்பட்டாலும், அந்த அடகு வைத்தவரின் கையொப்பத்தினை உரிய முறையில் உறுதிப்படுத்தி அடகுத்துண்டின் மூலப்பிரதியை அடகு பிடிப்பாளருக்கு முன்வைக்க முடியாத வேளையில், அதை வைத்திருப்பவரினால் அவரின் ஆளடையாளத்தை சான்றுப்படுத்துபவரினால் சமாதான நீதிவான் ஒருவர் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரின் முன்னிலையில் உரிய முறையில் தெரிவிக்கப்பட்ட தகவலுடன் அந்த அடகுக்குரிய அடகுத் துண்டின் மூலப் பிரதியை உரியவரினால் பொருட்களை அடகு பிடிப்பவருக்கு முன்வைத்தால் மற்றும் அந் நபரினால் பொருட்களை அடகு பிடிப்பவர் அல்லது அவரது முகவரின் அல்லது அவரது சேவகரின் முன்னிலையில் அந்த மூலப் பிரதியில் கையொப்பமிட்டால் மற்றும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தினால் அவ் அடகினை மீட்டுக் கொள்வதற்கு அம் மூலப் பிரதியை வைத்திருக்கும் நபருக்கு உரிமை உண்டு.

(4) "மேலே (1), (2) மற்றும் (3) ஆகிய உப பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் அடகுக்காக செலுத்தப்பட வேண்டிய கடன் மற்றும் அதற்குரியதாக அறவிடப்பட வேண்டிய வட்டியும், அந்தக் கடனுக்காக செலுத்தப்பட வேண்டிய ஏதாவது வரி ஒன்று இருந்தால் அந்த வரியையும் செலுத்துமிடத்து பொருட்களை அடகு பிடிப்பவரினால், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையில் அந்த அடகு மற்றும் அதனோடு தொடர்புடைய அடகுத் துண்டினை சமர்ப்பிக்கும் அடகு வைப்பவருக்கு அல்லது அடகுத் துண்டை வைத்திருப்பவருக்கு அந்த அடகினை ஒப்படைக்க வேண்டும். அடகினை அவ்வாறு ஒப்படைத்தது தொடர்பாக பொருட்களை அடகு பிடிப்பவருக்கு இங்கு பாதுகாப்பு கிடைக்கப்பெறுகின்றது.

சட்ட விரோதமாக அடகுத் துண்டினை தமது பொறுப்பில் வைத்திருத்தல்.

எவ்வாறான போதும் அடகுத் துண்டை வைத்திருப்பவர் அதனைத் திருடி அல்லது வேறு முறையில் சட்டத்திற்கு முரணாக அதன் உரிமையை பெற்றுக்கொண்டு அல்லது பெற்றுள்ளார் என சந்தேகிப்பதற்கு ஏற்ற முறையில் பொருட்களை அடகு பிடிப்பவருக்கு சந்தேகங்கள் இருந்தால், அது தொடர்பாக பிரதேசத்துக்குரிய பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும்."

அடகுத் துண்டு இல்லாத பொருட்களின் உரிமையாளருக்கு மற்றும் அடகு பிடித்தவருக்கு பாதுகாப்பினை வழங்குதல்.

23. (1) தான் ஏதாவது அடகு ஒன்றின் உரிமையாளர் என குறிப்பிடும், எனினும் அடகுத் துண்டின் மூலப்பிரதியை வைத்திருக்காத ஏதாவது ஒரு நபர் ஒருவருக்கு அல்லது 22 (3) உப பிரிவிற்கிணங்க அடகுத் துண்டின் மூலப் பிரதியை வைத்திருப்பதற்கு தமக்கு உரிமை உண்டு எனவும் எனினும் அந்தத் துண்டின் மூலப் பிரதி காணாமல் போய், களவாடப்பட்டு, தொலைந்து விட்டு அழிவடைந்து அல்லது வேறு ஒரு வஞ்சகமான முறையில் தம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என குறிப்பிடும் ஏதாவது நபர் ஒருவரினால் சமாதான நீதிவான் ஒருவரின் முன்னிலையில் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் முன்னிலையில் தான் என தமது ஆளடையாளத்தை சான்றுப்படுத்தும் ஒருவரினால் உரிய முறையில் தெரிவிக்கப்பட்ட தகவல் ஒன்று பொருட்களை அடகு பிடிப்பவருக்கு ஒப்படைக்குமிடத்து அந்த அடகினை மீட்டுக்கொள்ளும் உரிமை இருக்க வேண்டும். அந்த அடகுத் துண்டின் மூலப் பிரதி அந்நபரினால் சமர்ப்பிக்கப்படுமிடத்து கிடைக்கப்பெறும் உரிமை மற்றும் செயற்பாடுகள் அவருக்கும் மற்றும் பொருட்களை அடகு பிடிப்பவருக்கு இடையே ஏற்படும். அவ் வேளையில் அடகினை மீட்டுக்கொள்வதற்குரிய விடயத்திற்காக அவரினால் 18 ஆவது பிரிவிற்குரிய அடகுத் துண்டின் மூலப் பிரதி அல்லாத அடியிதழிலேயே கையொப்பம் இடப்பட வேண்டும்.

(2) மேலே (1) உப பிரிவின் கீழ் ஏதாவது நபர் ஒருவரினால் தெரிவிக்கப்படும் தகவலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது முக்கியமான தகவல் ஒன்று வஞ்சகமானது அல்லது போலியானது என்பதற்குரிய உண்மையான தகவல் ஒன்று பொருட்களை அடகு வைப்பவருக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லையாயின் அடகினை ஒப்படைத்த அல்லது அந்த தகவலுக்கு இணங்க வேறு முறையில் செயற்பட்டது தொடர்பான பொறுப்புக்களில் இருந்து பொருட்களை அடகு பிடிப்பவர் இங்கு பாதுகாக்கப்படுகின்றார்.

அடகு மீட்கப்பட்ட பின் அல்லது விற்ற பின் அடகுத் துண்டு பொருட்களை அடகு பிடிப்பாளரினால் வைத் திருக் கப் பட வேண்டும் என்பது.

24. (1) அடகு ஒன்றினை மீட்டுக் கொள்வது தொடர்பான விடயத்திற்காக அடகுத் துண்டின் மூலப் பிரதி பொருட்களை அடகு பிடிப்பாளருக்கு ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அடகு மீட்கப்பட்ட தினத்தில் இருந்து கணக்கிடப்படும் பன்னிரெண்டு மாத காலம் நிறைவடையும் வரை பொருட்களை அடகு பிடிப்பவரினால் அந்த அடகுத் துண்டின் மூலப் பிரதி, இரண்டாம் பிரதி மற்றும் மூன்றாம் பிரதிகளை தமது பொறுப்பில் வைத்திருக்கப்பட வேண்டும்.

(2) அடகுக்குரிய அடகுத் துண்டின் மூலப் பிரதியை ஒப்படைக்காது அந்த அடகினை விடுவித்துக் கொண்ட சந்தர்ப்பத்தில் அவ்வாறு அந்த அடகு விடுவிக்கப்பட்ட தினத்தில் இருந்து கணக்கிடப்படும் தினத்தில் இருந்து பன்னிரெண்டு மாத காலம் நிறைவடையும் வரை அந்த அடகுக்குரிய அடகுத் துண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பிரதிகள் மற்றும் அந்த விடுவித்துக் கொள்ளும் விடயத்திற்காக 23 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் தமக்கு ஒப்படைக்கப்பட்ட சத்தியக் கடதாசியை, பொருட்களை அடகு பிடிப்பவரினால் தமது பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்.

(3) இந்நியதிச் சட்ட ஏற்பாட்டின் கீழ் அடகு ஒன்று மீட்கப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில் அந்த அடகுக்குரிய அடகுத் துண்டின் இரண்டாம் அத்துடன் மூன்றாம் பிரதிகளை அந்த விற்பனைத் திகதியில் இருந்து கணக்கில் எடுக்கப்படும் பன்னிரெண்டு மாத காலம் நிறைவடையும் வரை பொருட்களை அடகு பிடிப்பவர் தனது பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்.

பொருட்களை அடகு பிடிப்பவரினால் வைக்கப்பட்டுள்ள பிணை நிதியைப் பயன்படுத்துதல் மற்றும் மீண்டும் செலுத்துதல்.

25. (1) ஏதாவதொரு அடகு ஒன்று ஏதாவது ஒரு அடகு பிடிப்பாளர் ஒருவருக்கு அடகு வைக்கப்பட்டிருக்கும் போது உறுதியான குறித்த ஏதாவதொரு நிலைமை ஒன்றின் கீழ் அந்த அடகு காணாமல் போன சந்தர்ப்பம் ஒன்றில், அந்த அடகு பிடிப்பாளரினால் வைக்கப்பட்டுள்ள பிணை, பொருட்களை அடகு வைத்தவருக்கு அல்லது அந்த அடகினை மீட்டுக்கொள்வதற்கு உரிமையுள்ள ஏதாவது நபர் ஒருவருக்கு இழப்பீட்டைச் செலுத்துவதற்காக, உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

பிணையைக் கழித்துக் கொள்ளல் மற்றும் வியாபாரத்தின் கணக்கினைத் தீர்த்து விடுவித்தல்.

(2) பொருட்களை அடகு பிடிப்பவரினால், இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள உரிமை உள்ளவர்களுக்கு மேலே (1) உப பிரிவின் கீழ் நட்டஈட்டு நிதியை செலுத்தியதன் காரணமாக 9 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவிற்கு இணங்க அனுமதிப்பத்திரதாரரினால் வைக்கப்படவேண்டிய வைப்பு நிதியில் குறைக்கப்படும் அளவு பிணையாக மீண்டும் வைப்பில் இடப்பட வேண்டும். மேலே (1) உப பிரிவின் கீழ் செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டு நிதி வைக்கப்பட்ட வைப்பு நிதியினை விட அதிகமான வேளையில் அவ்வாறு, மேலதிகமான நிதியையும் செலுத்த வேண்டும். இதற்கு மேலதிகமாக 9 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வைப்பு நிதி அடகு பிடிப்பாளரினால் மீண்டும் வைப்பில் இடப்பட வேண்டும்.

வியாபாரத்தினை முடிவிட்ட சந்தர்ப்பத்தில் வைப்பு நிதியை மீண்டும் அடகுபிடிப்பாளருக்குச் செலுத்துதல்.

(3) ஏதாவது நபரொருவரினால் பொருட்களை அடகு பிடிப்பாளராக வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வதைக் கைவிட்ட சந்தர்ப்பம் ஒன்றில், அவரினால் வைக்கப்பட்ட வைப்பு நிதியில் மேலே (1) ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டு நிதியினைச் செலுத்துவதற்காக ஏதாவது நிதி தேவைப்பட்டால் அந்நிதியினை அறவிட்டு மிகுதி நிதியை அந்த அடகு பிடிப்பாளருக்குச் செலுத்த வேண்டும்.

அடகுக்கு பாதிப்பொன்று ஏற்பட்ட சந்தர்ப்பத்தில்.

26. தீயினால் அல்லது தீயின் காரணமாக அல்லது பிற இயற்கை அனர்த்தம் ஒன்றின் காரணமாக ஈடு ஒன்று அழிவடைந்த சந்தர்ப்பத்தில் அல்லது ஈட்டுக்குப் பாதிப்பு ஒன்று ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் ஈட்டினை மீட்டுக் கொள்ளக்கூடிய கால எல்லையினுள் அடகு பிடிப்பாளரினால் விடுக்கப்படும் வேண்டுகோளின் கீழ், அடகு பிடித்த தினத்தில் ஈட்டின் பெறுமதி கடன் நிதி அத்துடன் வட்டி மற்றும் அந்தக் கடனுக்குப் பதிலாக செலுத்த வேண்டிய வரி காணப்பட்டால் அவ் வரியினையும் கழித்து மிகுதி நிதியினை அடகு வைப்பவருக்குச் செலுத்த அடகுபிடிப்பவர் பொறுப்பாக உள்ளார்.

காப்புறுதிப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

27. ஒவ்வொரு பொருட்களை அடகு பிடிப்பவரும் தம்மிடம் அடகு வைக்கப்பட்டுள்ள ஈட்டின் மொத்தப் பெறுமதி அத்துடன் வருடத்தில் ஈடாக பெற்றுக்கொள்ள எண்ணும் எல்லாப் பொருட்களினதும் மொத்தப் பெறுமதிக்கு இணங்க தமது வியாபாரத்தினை திறந்து வைத்திருக்கும் முழு காலத்திற்குமாக முழுமையான பொறுப்புடைய காப்புறுதிப் பாதுகாப்பு கிடைக்குமாறு காப்புறுதி செய்ய வேண்டும்.

அடகினை மீட்டுக் கொள்ளும் போது வழங்கப்படும் பற்றுச்சீட்டு.

28. ஈடு ஒன்றினை மீட்டுக் கொள்ளும் நேரத்தில் பொருட்களை அடகு பிடிப்பவருக்கு மீண்டும் செலுத்தப்பட்ட கடன் நிதி, வட்டி நிதி அத்துடன் அந்த நிதிக்குப் பதிலாக செலுத்த வேண்டிய குத்தகை நிதி இருந்தால் அந்த குத்தகை நிதியையும் குறிப்பிட்டு முதலாவது அட்டவணையில் உள்ள “உ” படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டு ஒன்று எல்லா அடகு பிடிப்பாளர்களினாலும் வழங்கப்பட வேண்டியதுடன், அந்தப் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்று பொருட்களை அடகு பிடிப்பவர் வைத்திருக்க வேண்டும்.

அடகை ஏலத்தில் விற்க முடியும் எனவும்.

29. (1) அடகு ஒன்றினை விடுவித்துக் கொள்ளக்கூடிய கால எல்லையினுள் விடுவித்துக் கொள்ளப்படாத ஒவ்வொரு அடகும் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டு அகற்றப்பட இயலுமான போதும் வேறு முறையில் அகற்றப்படக்கூடாது. மேலும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்படும் கட்டளை, விற்கும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ஏலத்தினை நடத்துவதற்காக இறைவரி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்பது.

(2) இப்பிரிவிற்கு முன்னரான ஏற்பாடுகளின் கீழ் அடகு ஒன்று பகிரங்க ஏலத்தில் விற்கும் வேளையில், அந்த அடகானது ஏதாவது பொருட்களை அடகு பிடிப்பாளரிடம் அடகு வைக்கப்பட்டு இருந்தால் அப்பொருட்களை அடகு பிடிப்பவரினால் அவ்ஏலம் இடம்பெற உள்ள திகதி மற்றும் நேரம் அவ் ஏலம் நடைபெற உள்ள இடம் தொடர்பான ஆரம்ப அறிவித்தல் ஒன்று, ஆகக் குறைந்தது அறுபது நாட்களுக்கு முன்னர்

அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக இறைவரி ஆணையாளருக்கு முன்வைக்க வேண்டும். அவ் அறிவிப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் இறைவரி ஆணையாளரினால் தமது முடிவினை ஏலம் நடைபெற தீர்மானிக்கப்பட்ட தினத்திற்கு ஆகக் குறைந்தது முப்பது நாட்களுக்கு முன் அடகு பிடிப்பாளருக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஈடு ஒன்று ஏலத்தில் இடப்படும் சந்தர்ப்பத்தில், அவ் ஈட்டினை பகிரங்க ஏலத்தில் விற்பதற்காக இறைவரி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்ட பின் அத்தினம், நேரம் அத்துடன் ஏலம் இடம்பெறும் இடம் தொடர்பான எழுத்து மூலமான அறிவிப்பு ஒன்று ஏலம் இடம்பெறும் தினத்திற்கு ஆகக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன் அடகு பிடிப்பாளரினால் பதிவுத் தபாலில் அந்த ஈட்டினை அடகு வைத்த நபருக்கு அனுப்ப வேண்டும்.

30. இந்நியதிச் சட்டத்தின் கீழ் அடகினை விற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அந்த அடகின் கீழ் வழங்கப்பட்ட கடன் நிதி மற்றும் அந்த அடகு விற்கப்பட்ட தினம் வரை அந்தக் கடன் நிதிக்காக அறவிடப்பட வேண்டிய வட்டியும், அக்கடன் நிதிக்காக செலுத்த வேண்டிய குத்தகை ஒன்று காணப்பட்டால் அந்தக் குத்தகை நிதியை விடவும் அதிகமான நிதிக்கு அந்த அடகு விற்கப்படும் இடத்து, பொருட்களை அடகு பிடிப்பவரினால், கடனுக்குரிய வட்டி அத்துடன் வரியை விடக்கூடிய நிதியத்திற்கு அடகினை விற்கும்போது நடைமுறை ஒழுங்கு.

(அ) அடகு விற்கப்பட்ட நிதி எவ்வளவு எனவும், அந்நிதியில் அறவிடப்பட வேண்டிய கடன் நிதி, வட்டி, ஏதாவது குத்தகை மற்றும் விற்பனைக்காக மேற்கொண்ட செலவு அத்துடன் கட்டணம் கழிக்கப்பட்ட பின் பொருட்களை அடகு வைத்தவரிடம் இருந்து வரவு வைக்கப்பட வேண்டிய நிதி எவ்வளவு எனவும், ஏலம் நிறைவடைந்து இரண்டு வாரங்களினுள் ஈட்டுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அடகு வைத்தவருக்கு எழுத்துமூலமான அறிவிப்பு ஒன்று பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்;

(ஆ) அடகு விற்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வருட காலத்தினுல் அந்த வரவுக்குரிய நிதியினை, அடகு வைத்தவர் வேண்டுகோள் விடுத்தால் அடகு பிடித்தவர் அந் நிதியை அடகு வைத்தவருக்கு செலுத்த வேண்டும் ;

(இ) "ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் 30 ஆந் திகதி மற்றும் மார்கழி மாதம் 31 ஆந் திகதி அடகு வைத்தவரினால் உரிமை கொண்டாடப்படாத நிதி காணப்பட்டால் அந் நிதி தொடர்பான கணக்கறிக்கை ஒன்று இறைவரி ஆணையாளருக்கு அடகு பிடிப்பவரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்" ;

(ஈ) மேலே (அ) உப பிரிவின் ஏற்பாட்டின்படி ஒருவருட கால எல்லையினுள் அடகு வைத்தவரினால் அந்த வரவுக்குரிய நிதிக்கு வேண்டுகோள் விடுவித்து தனது உரிமைகோராதவிடத்து அக்கால எல்லை முடிவடைந்ததும் உடனடியாக அந்நிதி இறைவரி ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

31. (1) 30 ஆவது பிரிவின் ஏற்பாட்டிற்கு இணங்க ஏதாவது நிதி ஒன்று இறைவரி ஆணையாளருக்கு வைப்பிலிடப்பட்ட சந்தர்ப்பத்தில், அது தொடர்பாக அடகு வைத்தவருக்கு தாமதமின்றி இறைவரி ஆணையாளரினால் அறிவிக்கப்பட வேண்டும். இறைவரி ஆணையாளரிடம் வைப்பிலிடப்பட்டுள்ள அடகினை விற்ற நிதி தொடர்பான நடவடிக்கை ஒழுங்கு விதிகள்.

(2) இறைவரி ஆணையாளரினால் மேலே (1) உப பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அறிவிப்பு ஒன்று தமக்கு கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து 06 மாத காலத்தினுள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியினை தமக்குச் செலுத்துமாறு அடகு வைத்தவரினால் இறைவரி ஆணையாளரிடம் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டால், அந் நிதியினை அவ் வேண்டுகோள் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் அடகு வைத்தவருக்கு இறைவரி அணையாளரினால் செலுத்தப்பட வேண்டும்.

(3) மேலே (2) உப பிரிவின் கீழ் 06 மாத காலத்தினுள் வேண்டுகோள் விடுக்கப்படாத விடத்து அடகு வைத்தவருக்கு செலுத்தவேண்டி இருந்த நிதி இறைவரி ஆணையாளரினால் மாகாண சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

32. ஏதாவது பொருட்களை அடகு பிடிப்பவரிடம் அடகு வைத்திருந்த அடகு ஒன்று இந்நியதிச் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் அல்லது நடாத்தப்படுகின்றது எனக் கருதும் பகிரங்க ஏலத்தில் விற்கும் போது, அந்த அடகு பிடிப்பாளரினால் அந்த அடகினைக் கொள்வனவு செய்ய முடியாது. பொருட்களை அடகு பிடிப்பவரினால் ஏலத்தின் போது அடகினைக் கொள்வனவு செய்ய முடியாது என்பது.

**அத்தியாயம்** VII

பரிசீலனை செய்வதும் பரீட்சிப்பதும் நடுக்கட்டுதலும்

ஈட்டு விற்பனைப் புத்தகம் மற்றும் கணக்கினைத் தடுத்துவைப்பதற் கான அதிகாரம்.

33. (1) அடகு ஒன்றை இந்நியதிச் சட்டத்தின் கீழ் விற்பனை செய்யும் திகதியில் இருந்து இரண்டு வருட காலத்தினுள் எச்சந்தர்ப்பத்திலும் பொருட்களை அடகு பிடிப்பவரின் புத்தகத்தில் அது விற்பனை செய்யப்பட்டுள்ளதாக எழுதப்பட்டிருக்கும் குறிப்பினையும், ஏல விற்பனை செய்தவரின் கையொப்பத்துடனான உறுதியுரையையும் அவ் ஏல விற்பனை பற்றிய விபரங்களைக் கொண்டிருக்கும் பெயர்ப்பட்டியலில் உள்ள குறிப்பு அல்லது அவ்விரண்டில் ஏதேனுமொரு குறிப்பை அந்த விற்பனை தொடர்பாக அந்தப் புத்தகத்தின் அல்லது பெயர்ப் பட்டியலில் அல்லது அவ்விரண்டில் ஒன்றில் போடப்பட்டிருக்கும் குறிப்புக்களை பரிசீலனை செய்வதற்கு அடகு பிடிப்பவர் அடகுத் துண்டை வைத்திருப்பவருக்கு அனுமதி வழங்க வேண்டும்.

(2) இறைவரி ஆணையாளர் அல்லது அவரினால் எழுத்துமூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அரச அல்லது மாகாண அரச சேவையின் உத்தியோகத்தருக்கு அல்லது குழு ஒன்றிற்கு பொருட்களை அடகு பிடிப்பவரின் வியாபாரத்திற்கு உரிய கணக்கினைப் பரிசோதித்துப் பார்க்க அதிகாரம் உண்டு.

அடகு வைப்பவரி னால் தாம் தொடர் பாக அல்லது அடகு வைக்கப்படும் பொருட்கள் தொடர் பாக சரியான தக வல்கள் சமர்பிக்காத விடத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை.

34. ஏதாவது பொருட்களை அடகு வைப்பவர் ஒருவர் -

(அ) அடகு வைப்பதற்காக ஏதாவது பொருள் ஒன்று பொருட்களை அடகு பிடிப்பவருக்கு சமர்ப்பிக்கும் போது தமது தேசிய அடையாள அட்டை செல்லுபடியான வெளிநாட்டு பயண கடவுச் சீட்டு சாரதி அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பிக்காதவிடத்து ; அத்துடன்/அல்லது

(ஆ) அடகு பிடிப்பதற்காக ஏதாவது பொருள் ஒன்றை /பொருட்களை அடகு பிடிப்பவருக்கு சமர்ப்பிக்கும் போது, தமக்கு அப்பொருள் எவ்வாறு கிடைக்கப் பெற்றது என்பது தொடர்பாக திருப்திப்படக்கூடிய தகவல் ஒன்றை வெளியிடுவதை தவிர்ப்பது அத்துடன்/ அல்லது அவ்வாறான தகவலை வெளியிடத் தவறுமிடத்து ; அத்துடன்/அல்லது

(இ) அடகு வைப்பதற்காக அடகு பிடிப்பவருக்கு முன்வைக்கும் ஏதாவது பொருள் ஒன்று தமது சொத்து ஒன்றா இல்லையா என்பது தொடர்பாக அல்லது அவரது பெயர் மற்றும் முகவரி தொடர்பாக வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கினால் ; அத்துடன/அல்லது

(ஈ) மீட்டுக்கொள்ள உரிமை இல்லாத அடகினை மீட்டுக்கொள்ள முயற்சிக்கும் அல்லது முயலும்; அத்துடன்/ அல்லது

(உ) ஏதாவது பொருள் ஒன்றை அடகு வைப்பதற்காக பொருட்களை அடகுபிடிப்பவருக்கு முன்வைக்குமிடத்து அப்பொருள் களவாடப்பட்டதா அல்லது வேறு வகையில் சட்டவிரோதமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருளா என்று சந்தேகப்படுவதற்குரிய காரணம் அந்த பொருட்களை அடகு பிடிப்பவருக்கு காணப்படுதல்.

போன்ற மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொள்ளும் போது நீதியான சந்தேகமொன்று பொருட்களை அடகு பிடிப்பவருக்கு காணப்படும் சந்தர்ப்பத்தில் பொருட்களை அடகு பிடிப்பவரினால் அது தொடர்பாக பிரதேசத்திற்குரிய பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

பொருட்களை அடகு பிடிப்பவரின் கடை அல்லது வாசஸ் தலத்தினைப் பரிசோதித்துப் பார்க்கும் அதிகாரம்.

35. இறைவரி ஆணையாளரினால் அல்லது அவரின் எழுத்துமூலமான அதிகாரம் வழங்கப்பட்ட அரச/ மாகாண அரச சேவையின் ஏதாவது உத்தியோகத்தர் ஒருவர் அல்லது குழு ஒன்றினால் ஏதாவது பொருட்களை அடகு பிடிப்பவரின் வியாபார நிலையத்திற்கு எந்த நேரத்திலும் உட் சென்று, அந்தப் பொருட்களை அடகு பிடிப்பாளரிடம் அடகு வைக்கப்பட்ட ஏதாவது ஈடு ஒன்று அத்துடன்/அல்லது அவரினால் பேணிச் செல்லப்படும் புத்தகங்கள், ஆவணங்களைப் பரிசோதித்துப் பார்த்து தேவையான குறிப்புக்களை எழுதிக்கொள்வது சட்டரீதியாகும். அதற்காக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் ஒத்துழைப்பு அவசியமென இறைவரி ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டால், அந்த பொலிஸ் உத்தியோகத்தருடன் சென்று மேற்கூறப்பட்ட எல்லா செயற்பாடுகளையும் அல்லது அவற்றின் சிலவற்றை மேற்கொள்ள இயலும். மேற்கூறிய விடயங்களை மேற்கொள்ளும்போது எந்த நபரினாலும் மேற்குறித்த உத்தியோகத்தர்களுக்கு அல்லது குழுவிற்கு எதிர்ப்புக் காட்டலாகாது.

## அத்தியாயம் VIII

தவறுகளும் தண்டனைகளும்

36. (1) (அ) அடகு வைப்பதற்காக ஏதாவது பொருள் ஒன்றை அடகு பிடிப்பவருக்கு சமர்ப்பிக்கும், எனினும் தமக்கு அந்தப் பொருள் எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பாக திருப்திப்படக் கூடிய விளக்கத்தைத் தரத் தவறும் அல்லது அளிக்க முடியாது போகும் ஒருவருக்கு ; அத்துடன்/அல்லது

பொருட்களை அடகு பிடிப்பவர் அத் துடன் வேறு நபர்கள் செய்யும் தவறு.

(ஆ) அடகு வைப்பதற்காக அடகு பிடிப்பவர் ஒருவரிடம் சமர்ப்பித்த பொருள் ஒன்று தம்முடைய பொருளா அல்லது இல்லையா என்பது தொடர்பாக அத்துடன்/அல்லது தமது பெயர் மற்றும் முகவரி தொடர்பாக அத்துடன்/அல்லது அப்பொருளின் உரிமையாளரின் பெயர் முகவரி தொடர்பாக வேண்டுமென்றே பொய்யான தகவல்களை அந்த அடகு பிடிப்பாளருக்கு சமர்ப்பிக்கும் ; அத்துடன் /அல்லது

(இ) வேறு நபர் ஒருவருடைய சொத்தொன்றான ஏதாவது பொருள் ஒன்றை சட்ட ரீதியற்ற முறையில் முன்வைக்க முன்வரும் அத்துடன்/அல்லது பொருட்களை அடகு பிடிப்பவரிடம் அடகு வைக்கும் ; அத்துடன்/அல்லது

(ஈ) தமக்குரித்தல்லாத வேறு ஒருவருடைய பொருளை அடகு பிடிப்பாளரிடம் இருந்து விடுவித்துக் கொள்வதற்கு முயற்சி செய்யும் ; அத்துடன்/அல்லது

(உ) ஏதாவது பொருட்களை அடகு வைப்பவரினால், பொருளொன்றை அடகு பிடிப்பதற்காக பொருட்களை அடகு பிடிப்பவருக்கு முன்வைக்குமிடத்து அப்பொருள் களவாடப்பட்ட அல்லது வேறு முறையில் சட்டத்திற்கு முரணாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருள் ஒன்று என சந்தேகிப்பதற்குரிய காரணம் பொருட்களை அடகு பிடிப்பவருக்கு ஏற்படுமிடத்து மற்றும் அது தொடர்பான பொய்யான தகவல்களைத் தெரிந்து கொண்டே தெரிவிக்கின்றார் எனத் தெரிய வருமிடத்து அத்துடன்/அல்லது

ஒவ்வொரு நபரும் குற்றமொன்றிக்கு குற்றவாளியாகுவார்.

(2) இந்நியதிச் சட்டத்தின் ஏதாவது ஏற்பாடு ஒன்றினை மீறும் அல்லது நியதிச் சட்டத்தின் மூலம் செய்யப்பட வேண்டுமெனப் பணிக்கப்பட்ட ஒன்றை செய்வதைத் தட்டிக் கழிக்கும் அல்லது அவ்வாறு செய்ய ஒத்துழைப்பு வழங்கும் அத்துடன்/அல்லது

ஒத்துழைப்பு வழங்குதல்.

ஒவ்வொரு நபரும் குற்றமொன்றிக்கு குற்றவாளியாகுவார்.

37. (1) நியதிச் சட்ட நகல் பிரதியின் 4 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க இறைவரி ஆணையாளரிடமிருந்து ஒழுங்கான அனுமதிப்பத்திரம் ஒன்றினை பெற்றுக்கொள்ளாது பொருட்களை அடகு பிடிக்கும் தொழில் ஒன்றினை மேற்கொண்டு செல்லும் ; அத்துடன்/அல்லது

பொருட்களை அடகு பிடிப்பவரினால் மேற்கொள்ளப்படும் தவறுகள்.

(2) நியதிச் சட்ட நகல் பிரதியின் 8 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க இறைவரி ஆணையாளருக்கு வருடாந்த கணக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்காத ; அத்துடன்/அல்லது ;

(3) நியதிச் சட்ட நகல் பிரதியின் 22 ஆவது பிரிவின் மற்றும் அத்துடன்/அல்லது 34 ஆவது பிரிவின் ஏற்பாடுகளை மீறும் அல்லாவிடின் ; அத்துடன்/அல்லது ;

(4) நியதிச் சட்ட நகல் பிரதியின் 27 ஆவது பிரிவின் மூலம் பணிக்கப்பட்டுள்ளபடி இத்தொழில் முழுமையான பொறுப்புடைய காப்புறுதி பாதுகாப்பு உள்ளது என்பதனைத் தவணை தவறும் ; அத்துடன்/அல்லது

(5) பதினெட்டு வயதைவிட குறைந்த அத்துடன்/அல்லது மது போதையில் உள்ள ஏதாவது நபர் ஒருவரிடமிருந்து ஏதாவது பொருள் ஒன்றினை அடகு பிடிப்பவர் ; அத்துடன்/அல்லது ;

(6) ஈட்டுத் துண்டின் மூலப் பிரதியை அடகு பிடிப்பவருக்கு ஒப்படைக்காது பொருளொன்றினை அடவு பிடிப்பவர் ; அத்துடன்/அல்லது.

(7) வேறு பொருட்களை அடகு பிடிக்கும் ஒருவரினால் வழங்கப்பட்ட ஈட்டுத் துண்டின் மூலப் பிரதியை விலைக்கு வாங்கும் அல்லது அடகு பிடிக்கும் அல்லது பரிமாறிக்கொள்ளும் ; அத்துடன்/அல்லது

(8) பொருட்களை அடகு பிடிக்கும் தொழிலுக்காக பதினெட்டு வயதை விடக் குறைந்த ஊழியர் ஒருவரை சேவையில் அமர்த்தும் ; அத்துடன்/அல்லது

(9) தம்மிடம் அடகு வைக்கப்பட்டிருக்கும் அடகு ஒன்றினை தானே விலைகொடுத்து வாங்கும் நோக்கில் அதற்கு வசதி செய்துகொள்ளல் ; அத்துடன்/அல்லது ;

(10) தம்மிடம் அடகு வைக்கப்பட்டுள்ள ஈடு ஒன்றை அதனை விடுவித்துக் கொள்ளும் காலத்தினுள் அல்லது அடகு வைப்பதற்கு முன்வைக்கப்பட்ட பொருள் ஒன்றை அவ்வேளையில் கொள்வனவு செய்ய, விற்க அல்லது அகற்ற அப்பொருட்களை அடகு வைத்த அல்லது அடகு வைப்பதற்கு முன்வந்த நபருடன் இணக்கம் ஒன்றுக்கு வரும் ; அத்துடன்/அல்லது

(11) தம்மிடம் அடகு வைக்கப்பட்டுள்ள ஈடு ஒன்றை அதனை விடுவித்துக் கொள்ளும் காலத்தினுள் அல்லது அடவு வைப்பதற்கு முன்வைக்கப்பட்ட பொருள் ஒன்றை அவ்வேளையில் கொள்வனவு செய்ய, விற்க அல்லது அகற்ற அடகு வைத்தவர் அல்லாத வேறு ஏதாவது நபர் ஒருவருடன் இணக்கத்திற்கு வரும் ; அத்துடன்/அல்லது

(12) தம்மிடம் அடகு வைக்கப்பட்டுள்ள ஏதாவது ஈடு ஒன்று இந்நியதிச் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுளள முறைக்கு மாறாக விற்கும் அல்லது வேறு முறையில் விடுவிக்கப்படும் ; அத்துடன்/அல்லது;

(13) பேணப்பட வேண்டும் என இந்நியதிச் சட்டத்தில் தமக்கு பணிக்கப்பட்டுள்ள ஏதாவது புத்தகத்தில் தவறான குறிப்பொன்றினை மேற்கொள்ளும் அல்லது அதில் உள்ளடக்கப்பட வேண்டும் என இந்நியதிச் சட்டத்தில் தமக்கு பணிக்கப்பட்ட ஏதாவது குறிப்பொன்றை இடுவதைத் தட்டிக் கழிக்கும் அத்துடன்/அல்லது.

(14) இந்நியதிச் சட்டத்தில் தண்டனை எனக் குறிப்பிடப்படும் ஏதாவது ஒன்றைத் தவிர வேறு ஏதாவது ஒரு ஏற்பாட்டினை மீறும்

ஒவ்வொரு அடகுபிடிப்பாளரும் குற்றங்களுக்கு குற்றவாளிகளாக வேண்டும்.

*சில சந்தர்ப்பங்களில் துணிமணி ஆடைகள், அரைகுறையான பொருட்கள் முதலியன அடகு பிடிப்பதற்கு தடை.*

38. கழுவுவதற்கு, சுத்திகரிப்பதற்கு, மினுக்குவதற்கு, திருத்துவதற்கு, உற்பத்தி செய்வதற்கு வேறு அரைகுறையாக உள்ள அல்லது அலங்காரப்படுத்த வேண்டிய அல்லது அழுத்தப்படுத்தப்பட வேண்டிய எவருக்கேனும் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் ஆடைகள் அல்லது துணிகளை அல்லது செய்து முடிவுறாத பொருள் ஒன்றையோ தெரிந்து கொண்டே அடகு பிடிக்கும் பொருட்களை அடகு பிடிக்கும் ஒருவர் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாகுவார்.

*வைப்பிலிடுவதைத் தவறும் குற்றம்.*

39. எவரேனும் ஒரு அடகு வைப்பவருக்கு வரவு வைக்கவேண்டிய தொகையினை 30 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள முறையில் இறைவரி ஆணையாளருக்கு வைப்பிலிடுவதில் இருந்து தவறும் ஒவ்வொரு பொருட்களை அடகு பிடிப்பவரும் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக வேண்டும்.

*வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் பணிப்பாளர்கள் மற்றும் முகாமையாளர்களினால் மேற்கொள்ளப்படும் குற்றங்கள்.*

40. (1) நபர்களைக் கொண்ட சபை ஒன்றினால் குற்றம் ஒன்று இழைக்கப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் அவ்வேளையில் நபர்களைக் கொண்ட சபை கூட்டுத்தாபனம் ஒன்றாயின் அக்கூட்டுத்தாபனத்தின் எல்லா பணிப்பாளர்களும் மற்றும் உத்தியோகத்தர்களும் அல்லது வியாபாரத் தாபனமொன்றாயின், அவ் வியாபார தாபனத்தின் எல்லா பங்குதாரர்களும் அல்லது வியாபார தாபனம் ஒன்றல்லாத கூட்டுத்தாபனம் ஆக்கப்படாத நிறுவனமாயின் அதன் முகாமைத்துவமும் மற்றும் நிர்வாகத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அத் தாபனத்தின் எல்லா உத்தியோகத்தர்களும் அத்தவறுக்கு குற்றவாளிகளாக கருதப்பட வேண்டும்.

எவ்வாறான போதும் அத்தவறு அவர் அறியாத வகையில் நிகழ்ந்துள்ளது எனவும் அல்லது அத்தவறு இடம் பெறுவதை தடுக்க தேவையான எல்லா செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டது என அவரினால் நிரூபிக்கப்பட்டால் அவ்வாறான எந்தவொரு நபரையும் அத்தவறுக்கு குற்றவாளியாக கருதிக் கொள்ளக்கூடாது.

(2) பொருட்களை அடகு பிடிக்கும் தொழில் முயற்சியை மேற்கொண்டு செல்லும் பொழுது அல்லது அது சம்பந்தமாக வேலை செய்யும் பொழுது பொருட்களை அடகு பிடிப்பவரின் பணியாளரினால் அல்லது அவரது பிரதி நிதியினால் மேற்கொள்ளப்படும் அல்லது அவரது பிரதி நிதியினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளாது விட்ட ஏதாவதொரு விடயமும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையில் அப்பொருட்களை அடகு பிடிப்பவரினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளாது விடப்பட்ட விடயம் ஒன்றாகக் கருதப்பட வேண்டும்.

*பொருட்களை அடகு பிடிப்பவர்களுடைய பணியாட்கள் அல்லது பிரதிநிதிகள் செய்யும் தவறுகள்.*

எவ்வாறான போதும் பொருட்களை அடகு பிடிப்பவரது ஊழியர் ஒருவர் அல்லது முகவர் ஒருவரினால் இந்நியதிச் சட்டத்தின் ஏதாவதொரு ஏற்பாடு ஒன்றை மீறும் படியான விடயம் ஒன்று மேற்கொண்டு இருந்தால் அல்லது மேற்கொள்வதில் இருந்து தவறி இருந்தால் அப்பணியாளர் அல்லது முகவர் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாக வேண்டும்.

*தவறுகளும் தண்டனைகளும்.*

41. (1) (அ) இந்நியதிச் சட்டத்தின் 2, 3 (1), 4 (1), 14, 17, 19, 22 (4), 27, 29, 30, 34, 36, 37 (12), 38, 39, 44, 45 ஆகிய பிரிவுகளை மீறிச் செயற்படும் ஒவ்வொரு நபரும் மஜிஸ்திரேட் ஒருவரின் முன்னிலையில் நடைபெறும் வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்படும் இடத்து, ரூபா இரண்டு இலட்சத்துக்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஆறுமாத காலத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கு அல்லது அந்த தண்டம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்பட்டாக வேண்டும். மேற்குறிப்பிட்ட தண்டங்களுக்கு மேலதிகமாக அடகு பிடிக்கும் தொழில் முயற்சியினை மேற்கொண்டு செல்லும் அடகு பிடிப்பாளரின் வியாபாரத்தினை மூடிவிடுவதற்காக கட்டளையிடுவதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அந்த அடகு வியாபாரம் மற்றும் அடகுகளின் பாதுகாப்பு அடகுகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு ஒப்படைப்பது போன்றன தொடர்பாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையில் சமர்ப்பிக்கப்படும் விபரங்களுக்கிணங்க நீதிமன்றத்தினால் உரிய கட்டளை பிறப்பிக்க இயலும் ;

(ஆ) வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளாது அடகு பிடிக்கும் தொழிலினை மேற்கொண்டு செல்லும் அடகு பிடிப்பாளருக்கு மேலே (1) (அ) உப பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக அறவிடப்பட வேண்டிய நிலுவை வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் அத்துடன் இந் நியதிச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் (5) ஆவது உப பிரிவின் ஏற்பாட்டிற்கு இணங்க தண்டப்பணத்திற்கு சமமான நிதி ஒன்றை தண்டம் ஒன்றாக அறவிடுவதற்கு நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படல் வேண்டும். இவ் உப பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் அறவிடப்படும் ஒவ்வொரு நிதியும் மாகாண சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்;

(இ) வருடாந்த அனுமதிப்பத்திரத்தினைப் புதுப்பிக்காது அடகு பிடிக்கும் தொழிலினை மேற்கொண்டு செல்லும் அடகு பிடிப்பாளருக்கு மேலே (1) (அ) உப பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள தண்டனைகளுக்கு மேலதிகமாக அறவிடப்பட வேண்டிய நிலுவை வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் அத்துடன் இந்நியதிச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் ஏற்பாட்டிற்கு இணங்க தண்டப்பணத்திற்கு சமமான நிதி ஒன்றை தண்டம் ஒன்றாக அறவிடுவதற்கு நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படல் வேண்டும். இவ் உப பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் அறிவிடப்படும் ஒவ்வொரு நிதியும் மாகாண சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

(ஈ) மேலே (1) (அ) உப பிரிவின் கீழேயான தண்டத்திற்கு மேலதிகமாக 38 ஆவது பிரிவின் கீழ் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகுமிடத்து, அத்தவறுக்கு நீதிமன்றத்தினால் அமுல்படுத்தக்கூடிய வேறு ஏதாவது தண்டத்திற்கு மேலதிகமாக அந்த ஈட்டினை நீதிமன்றத்தின் முன்னிலையில் அல்லது நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படும் வேறு முறையிலோ அதன் உரிமையாளருக்கு ஒப்படைக்குமாறு அந்த அடகு பிடிப்பாளருக்கு அந் நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்க முடியும்.

(உ) மேலே (1) (அ) உப பிரிவின் கீழேயான தண்டத்திற்கு மேலதிகமாக 31 ஆவது பிரிவின் கீழ் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகுமிடத்து அத்தவறுக்கு நீதிமன்றத்தினால் அமுல்படுத்தக் கூடிய வேறு ஏதாவது தண்டத்திற்கு மேலதிகமாக அந்த நிதிக்கு சமமான நிதி ஒன்றை தண்டம் ஒன்றை அறவிட்டுக்கொள்ளும் முறையில் அந்தப் பொருட்களை அடகு பிடிப்பவரிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும். அந்த நிதியும் நீதிமன்றத்தினால் அறவிடப்படும் வேளையில், அந்த நிதி இறைவரி ஆணையாளரின் பொறுப்பில் வைப்பிலிடப்பட வேண்டும்.

பொதுத் தண்டனை.

*41 (2)* இந்நியதிச்சட்டத்தின் *13, 15, 18 (1), 18 (3), 19, 24, 32, 35, 37 (5), 37 (6), 37 (7), 37(8), 37(9), 37 (11), 37 (13)* மற்றும் 54 ஆகிய பிரிவுகளை மீறிச் செயற்பட்ட ஒவ்வொரு நபரும் மஜிஸ்திரேட் ஒருவரின் முன்னிலையில் நடைபெறும் வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்படும் இடத்து, ரூபா இரண்டு இலட்சத்துக்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஆறு மாத காலத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனைக்கு அல்லது அந்த தண்டம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்பட்டாக வேண்டும்.

பொருட்களை அடகு பிடிப்பவரின் சொத்தில் சட்ட விரோதமாக வைக் கப்பட்டுள்ள பொருட்கள்.

*42.* ஏதாவது பொருட்களை அடகு பிடிப்பவரின் சொத்தில் ஏதாவது பொருள் ஒன்று அல்லது பல பொருட்கள் சட்டத்திற்கு முரணாக வைக்கப்பட்டுள்ளன என இந்நியதிச் சட்டத்தின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழக்கு விசாரணையின் போது, ஏதாவது ஒரு நீதிமன்றம் ஒன்றுக்கு அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அப்பொருட்கள் அல்லது பொருட்களை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறும், நீதிமன்றத்தினால் சிறந்தது எனக் கருதும் ஏதாவது பணிப்புரைகள் காணப்பட்டால் அப்பணிப்புரைகளின் கீழ் அந் நீதிமன்றத்தினால் பெயர் குறிப்பிடப்படும் ஏதாவது நபர் ஒருவரிடம் அப்பொருள் அல்லது பொருட்களை ஒப்படைக்குமாறும், அவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் உரிய பொருள் அல்லது பொருட்களை அரசுடைமையாக்குமாறும், கட்டளையிடும் அதிகாரம் அந்நீதிமன்றத்திற்கு உண்டு.

## அத்தியாயம் IX

வியாபாரத்தின் உரிமையைக் கையளிப்பது மற்றும் வியாபாரத்தினை நிறைவு செய்வது

அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கு வேண்டு கோள் விடுக்கும் போது அடகு பிடிப் பாளரின் மரணத் தின் பின்னர் வியாபாரத்தை கையளிக்க வேண் டிய நபர் தொடர் பாக உறுதிப்பத் திரம் ஒன்று சமர்ப் பிக்கப்பட வெண்டும் என்பது.

*43. (1)* பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரம் தனி நபர் ஒருவரினால், நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தால், அந்த நபரின் மரணத்தின் பின்னர், அந்த வியாபாரத்தின் உரிமையை கையளிப்பதற்கு எண்ணுமிடத்து அந் நபரினால் உரிய முறையில் தயாரிக்கப்பட்ட உறுதிப் பத்திரத்தை பதிவு செய்வதற்கு வேண்டுகோள் விடுக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது வருடாந்த அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறான போதும் அவ்வாறான பெயர் குறிப்பிடப்பட்ட நபர் பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வதற்காக இந்நியதிச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்க தகைமை உள்ள ஒருவராக இருத்தல் வேண்டும்.

*(2)* மேலே *(1)* ஆவது உப பிரிவின் கீழ் வியாபாரத்தினை கையளிப்பதற்கு எண்ணும் நபர் மரணமெய்திய வேளையில், அந்த நபருக்கு பதிலாக வேறு நபர் ஒருவருடன் கையொப்பமிடப்படும் இணக்கம் உள்ளிட்ட உறுதிப்பத்திரம் ஒன்று இறைவரி ஆணையாளருக்கு பொருட்களை அடகு வைப்பவரினால் மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

*(3)* பொருட்களை அடகு வைக்கும் வியாபாரமொன்று பங்காளிகளினால் பேணிச் செல்லப்படுமிடத்து அந்த வியாபாரத்தினை நிறைவு செய்யும் போது அடகு வைப்பவர்களின் உரிமையினை பாதுகாப்பதற்காக பங்காளிகளின் வியாபார ஒப்பந்தத்தில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். பங்காளிகளின் வியாபார ஒப்பந்தத்தில் அது தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது இறைவரி ஆணையாளரின் கருத்தாயிருந்தால் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது நிராகரிக்கப்பட வேண்டும்.

வியாபாரத்தினைக் கையளிப்பதற்காக இறைவரி ஆணை யாளரின் எழுத்து மூலமான அங்கீ காரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளப் பட வேண்டும் என் பது.

*44. (1)* அடகு வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டு செல்லும் அடகு பிடிப்பவர் ஒருவர் அவ் வியாபாரத்தை ஏதாவது ஒரு தினத்தில் இருந்து வேறு ஏதாவது ஒரு நபர் ஒருவருக்கு கையளிப்பதற்கு எண்ணி இருந்தால், இறைவரி ஆணையாளரிடம் அத்தினத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் எழுத்து மூலமான வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

*(2) (அ)* இவ்வாறு வேண்டுகோளொன்று கிடைக்கப்பெறுமிடத்து, இறைவரி ஆணையாளரினால், அக்கடிதம் கிடைக்கப்பெற்று ஏழு நாட்களுக்குள்–

(i) அந்த வியாபாரத்தின் அடகு பிடிக்கும் செயற்பாட்டினை உறுதியாக குறிப்பிடும் தினம் ஒன்றில் இருந்து நிறுத்துமாறு ;

(ii) அடகுபிடிப்பாளரினால் தமது வியாபாரம் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மற்றும் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்திற்கு உரிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடமிருந்து சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்குமாறு ;

(iii) ஒப்படைக்கப்படுபவரினாலும் இந்நியதிச் சட்டத்தின் 3 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளிட்ட சத்தியக் கடதாசி ஒன்று மற்றும் தான் வியாபாரம் ஒன்று மேற்கொள்வதாயின் தமது வியாபாரம் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடமிருந்து மற்றும் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்திற்கு உரிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடமிருந்து சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்குமாறும் ;

(iv) மீட்டுக் கொள்வதற்காக காணப்படும் எல்லா ஈட்டுக்கள் தொடர்பான எல்லா விபரங்களையும் சமர்ப்பிக்குமாறும் ;

(v) இறைவரி ஆணையாளரினால் தேவை என கருதும் வேறு தகவல்களை சமர்ப்பிக்குமாறும்

பொருட்களை அடகு பிடிப்பவருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட வேண்டும்.

(ஆ) இப்பிரிவின் கீழ் இறைவரி ஆணையாளருக்கு எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்று விடுப்பதற்கு உரிய நபர் ஏதாவது உடல் உள தாக்கத்திற்கு உட்பட்டிருந்தால் அவ்வியாபாரம் தனிநபருக்குரிய வியாபாரம் ஒன்றாயின் அவ்வேண்டுகோளை அந்த நபரின் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட முகவர் ஒருவரின் மூலம் விடுக்க முடியும் பங்காளிகளின் வியாபாரமொன்றாயின் அந்த வேண்டுகோளை வேறு பங்காளி ஒருவர்/பங்காளிகளினால் விடுக்கப்பட வேண்டும்.

(3) மேலே (1) ஆவது பிரிவின் கீழ் அடகு பிடிக்கும் வியாபாரம் ஒன்றினை கையளிப்பதற்கான வேண்டுகோளொன்று இறைவரி ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து ஒரு பஞ்சாங்க மாதத்தினுள் தமது தீர்மானத்தை இறைவரி ஆணையாளரினால் அந்த நபருக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

(4) மேலே 3 ஆவது உப பிரிவின் கீழ் இறைவரி ஆணையாளரினால் தமது தீர்மானம் எழுத்துமூலமாக அறிவித்த தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் பொருட்களை அடகு பிடிப்பவரினால் தமது வியாபாரத்தை கையளிக்கும் நபரினது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கையளிக்கப்படும் திகதி என்பன குறிப்பிடப்படும் பகிரங்க அறிவிப்பொன்று வியாபார ஸ்தாபனம் அத்துடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் விளம்பரம் ஒன்றின் மூலம் வெளியிடப்பட வேண்டும்.

45. (1) அடகு பிடிக்கும் வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டு செல்லும் பொருட்களை அடகு பிடிப்பவர் ஒருவர் தமது வியாபாரத்தினை நிறைவு செய்வதற்கு எண்ணுவாராயின் அவ்வாறு வியாபாரத்தினை நிறைவு செய்வதற்கு எண்ணும் தினத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். *வியாபாரத்தினை நிறைவு செய்தல்.*

(2) மேலே (1) உப பிரிவின் கீழ் பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டு செல்லும் நபர் ஒருவர், இறைவரி ஆணையாளருக்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுக்கும் இடத்து அந்நபரினால் தமது வியாபாரத்தினை நிறைவு செய்ய எண்ணும் அறிவித்தல் ஒன்று விடுக்கும் தினத்தில் இருந்து பதினான்கு நாட்களுக்குள் வியாபார நிலையத்தில் மற்றும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் விளம்பரம் ஒன்றின் மூலம் வெளியிடப்பட வேண்டும்.

(3) (அ) மேலே (1) ஆவது உப பிரிவின் கீழ் வியாபாரத்தினை முடிவிடுவதற்கான எழுத்து மூலமான வேண்டுகோள் கிடைக்கப்பெறுமிடத்து, இறைவரி ஆணையாளரினால் அக்கடிதம் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களுக்குள்–

(i) அவ்வியாபாரத்தின்அடகு பிடிக்கும் செயற்பாட்டினை உறுதியாக குறிப்பிடும் தினம் ஒன்றில் இருந்து நிறுத்துமாறு ;

(ii) விடுவிப்பதற்கு உள்ள எல்லா ஈட்டுக்கள் தொடர்பான முழு விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு ;

(iii) கடைசி ஈட்டினை விடுவித்துக் கொள்ளவேண்டிய தினம் வரை வியாபார நடவடிக்கையினை மேற்கொள்வதாக சத்தியப் பிரமாண கடதாசி ஒன்றினை சமர்ப்பிக்குமாறும்

பொருட்களை அடகு பிடிப்பவருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட வேண்டும்.

(ஆ) மேலும், இறைவரி ஆணையாளரினால் அப்பொருட்களை அடகுபிடிப்பவர் அவ் வியாபாரத்தை முடிவிடுவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் என உரிய பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து அவரின் வியாபாரத்திற்கு எதிராக குற்றங்கள் சம்பந்தமாக ஏதாவதொரு முறைப்பாடொன்று காணப்படுகின்றதா என்பது தொடர்பாக மற்றும் அவ்வியாபாரத்திற்கு எதிராக குற்றங்கள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கொன்று காணப்படுகின்றதா என்பது தொடர்பான அறிக்கை ஒன்றை பொருட்களை அடகு பிடிப்பவரின் நிரந்தர வசிப்பிடம் உள்ள மற்றும் வியாபாரத்திற்கு உரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் ;

(இ) மேலே (1) உப பிரிவின் கீழ் இறைவரி ஆணையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோளொன்றை விடுப்பதற்கு உரிய நபர் ஏதாவது உடல் உள தாக்கத்திற்கு உட்பட்டிருந்தால் அவ்வியாபாரம் தனிநபருக்குரிய வியாபாரம் ஒன்றாயின் அந்த வேண்டுகோளை அந்த நபரின் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட முகவர் ஒருவரின் மூலம் விடுக்க முடியும் பங்காளிகளின் வியாபாரமொன்றாயின் அந்த வேண்டுகோளை வேறு பங்காளி ஒருவர்/பங்காளிகளினால் விடுக்கப்பட வேண்டும்.

(4) மேலே (1) ஆவது உப பிரிவின் கீழ் அடகு பிடிக்கும் வியாபாரம் ஒன்றினை கையளிப்பதற்கான வேண்டுகோளொன்று இறைவரி ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து ஒரு பஞ்சாங்க மாதத்தினுள் தமது தீர்மானத்தை இறைவரி ஆணையாளரினால் அந்த நபருக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டும்.

(5) மேலே (4) ஆவது உப பிரிவின் கீழ் இறைவரி ஆணையாளரினால் தமது தீர்மானத்தை எழுத்துமூலமாக அறிவித்த தினத்தில் இருந்து முப்பது நாட்களுக்குள் பொருட்களை அடகு பிடிப்பவரினால், தமது வியாபாரத்தை நிறைவு செய்யும் தினத்தைக் குறிப்பிட்டு பகிரங்க அறிவிப்பொன்று வியாபார ஸ்தாபனத்தில் மற்றும் சிங்கள, தமிழ், மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் அறிவிப்பு ஒன்றின் மூலம் வெளியிடப்பட வேண்டும்.

## அத்தியாயம் X

### விஷேட சந்தர்ப்பம்

நோய்வாய்ப்பட்டுள்ள நபருக்குப் பதிலாக பொறுப்பாளர் செயற்பட முடியும் என்பது.

46. ஏதாவது நபர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்நியதிச் சட்டத்தில் அல்லாவிடின் இந்நியதிச் சட்டத்தின் கீழ் உள்ள கட்டளை ஒன்று அல்லது செயற்பாடொன்றை மேற்கொள்ளுதல், அந்நபர் மற்றும் உடல் பாதிப்பிற்கு உட்பட்டவராயின், அப்பாதிப்பிற்கு உட்பட்டவருக்கு பதிலாக சட்ட ரீதியான அதிகாரம் பெற்ற நபரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பங்குடமை வியாபாரம் ஒன்றுக்குப் பதிலாக முன்னுரிமை பங்காளி செயற்பட வேண்டும் என்பது.

47. ஏதாவது நபர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் உள்ள ஏதாவது செயற்பாடு ஒன்றை மேற்கொள்வது, இரண்டு நபர்கள் அல்லது அதைவிடக்கூடிய எண்ணிக்கையினர் உள்ள பங்குடமை வியாபாரம் ஒன்றாகுமிடத்து அவ் வியாபாரத்தின் முக்கிய பங்காளரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் பங்குடமை வியாபாரத்தின் முக்கிய பங்குதாரராக இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள ஏதாவது நபர் ஒருவர் அவர் அந்த பங்குடமையின் பங்குதாரர் இல்லை என்பதற்கு அல்லது இலங்கையின் வேறு ஏதாவது நபர் ஒருவர் அந்த பங்கு வியாபாரத்தின் முக்கிய பங்காளி என கருதிக் கொள்ளக்கூடாது.

கூட்டுத்தாபனம் அல்லது நபர்களைக் கொண்ட சபைக்குப் பதிலாக பொறுப்பினை ஒப்படைத்தல்.

48. தனியார் சபை ஒன்றினால் இந்நியதிச் சட்டத்தின் அல்லாவிடின் இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவதொரு செயற்பாட்டினை மேற்கொள்ளும் வேளையில் அத்தனியார் சபை கூட்டுத்தாபனம் ஒன்றாயின் அக் கூட்டுத்தாபனத்தின் எல்லா பணியாளர்களும் மற்றும் உத்தியோத்தர்களும் அல்லது வியாபாரத் தாபனமொன்றாயின் அவ்வியாபார தாபனத்தின் எல்லா பங்குதார்களும் அல்லது வியாபார தாபனம் ஒன்றலலாத கூட்டுத்தாபனம் ஆக்கப்படாத நிறுவனம் ஒன்றாயின் அதன் முகாமைத்துவமும் மற்றும் நிர்வாகத்திற்காகப் பொறுப்புச் சொல்ல வேண்டிய அத்தாபனத்தின் எல்லா உத்தியோகத்தர்களும் அந்நடவடிக்கை தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டும்.

எவ்வாறான போதும் ஏதாவது கூட்டுத்தாபனம் ஒன்று, வியாபாரத் தாபனம் ஒன்று அல்லது கூட்டுத்தாபனமாக்கப்படாத தாபனம் ஒன்றினை தனியார் சபைக்காக இந்நியதிச் சட்டத்தின் கீழ் காணப்படும் ஏற்பாடுகளின் கீழ் அறிவிக்கப்படும் ஏதாவது நபர் ஒருவரினால் அத்தனியார் சபையுடன் தமக்கு எந்தவொரு தொடர்பொன்றும் இல்லையென அல்லது உரிய விடயம் தொடர்பாக தமக்கு எந்தவொரு பொறுப்பொன்றும் இல்லையென நிரூபித்தால் அந்நபர் அச்செயற்பாட்டிற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவரெனக் கருதிக் கொள்ளப்படக் கூடாது.

*49.* இந்நியதிச் சட்டத்தின் கீழ் பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரமொன்றினை மேற்கொண்டு செல்லும் ஏதாவது நபர் ஒருவரினால் அவ் வியாபாரத்தினை வேறு நபர் ஒருவருக்கு ஒப்படைக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் அவ் ஒப்படைப்புக்கு முன்னரான காலப் பகுதிக்காக அவ் வியாபாரம் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நிலுவை நிதி தொடர்பாக கையேற்பவருக்கு அறிவித்தலொன்று விடுக்கப்பட்டிருக்காத போதும், அக்கையேற்பவரிடம் இருந்து அந்நிலுவை அறவிடப்பட வேண்டும்.

*ஒப்படைக்கப்படுவர் நபர் நிலுவை நிதி யினைச் செலுத்த வேண்டும் என்பது.*

*50.* அடகு பிடிக்கும் வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டு சென்ற ஏதாவது நபர் ஒருவர் மரணமெய்திய சந்தர்ப்பமம் ஒன்றில், அந்நபர் உயிர்வாழ்ந்து இருந்தால், அவர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு உட்பட்டிருந்த எல்லா செயற்பாடுகள், விடயங்கள் மற்றும் அம்சங்களை மேற்கொள்வதற்கு அம் மரணமெய்திய நபரின் பின் உரித்தாளர் உட்பட்டாக வேண்டும். மரணமெய்தியவர் மரணமெய்திய தினத்திற்கு முன்னுள்ள எல்லா கால எல்லைகள் தொடர்பாகவும், அவர் உயிர் வாழ்ந்தால் அவரிடமிருந்து அறவிடக்கூடியதாக இருந்த எல்லா நிலுவை நிதியும், அந்தப் பின் உரித்தாளரிடம் இருந்து அறவிட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

*மரணமெய்திய நபர் ஒருவரினால் செலுத்த வேண்டிய நிலுவை நிதியைச் செலுத்துவதற்கு பின் உரித்தாளர் உட்பட்டாக வேண் டும் என்பது.*

எவ்வாறான போதும் -

(அ) மரணமெய்தியவர் ஏதாவதொரு நடவடிக்கை அல்லது தட்டிக்கழிப்பொன்று தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் VIII ஆவது அத்தியாயத்தின் ஏற்பாட்டின் கீழ் பின் உரித்தாளருக்கு எதிராக எந்தவொரு வழக்கொன்றினையும் தொடுக்கலாகாது ;

(ஆ) இப்பிரிவின் கீழ் பின் உரித்தாளரின் பொறுப்பு -

(i) மரணமெய்தியவருக்கு இப்பிரிவின் கீழ் நிலுவை நிதியினைச் செலுத்துவதற்கு பொறுப்பு ஒன்று உண்டு என அறிவிப்பொன்று விடுக்கப்பட்ட தினத்தில் பின் உரித்தாளரின் சொத்து அல்லது நிர்வாகத்தின் கீழ் காணப்பட்ட மரணமெய்தியவரின் ஆதனத்தின் அளவிற்கு ; அத்துடன்

(ii) பின் உரிமைக்காரர் ஒருவருக்கு அல்லது அச்சொத்துடன் ஏதாவது ஒரு தொடர்பொன்று காணப்படும் நபர் ஒருவருக்கு உரியதாக இருக்கக்கூடிய அவ்வாதனத்தின் ஏதாவது ஒரு பகுதியொன்றின்.

கூட்டுத்தொகைக்கு உட்பட்டதாக வேண்டும்.

## அத்தியாயம் XI

### நிலுவை நிதியினை அறவிட்டுக் கொள்ளுதல்

*51. (1)* இந்நியதிச் சட்டத்தின் கீழ் அறவிடப்படவேண்டி இருந்த ஏதாவது நிலுவை நிதி ஒன்றினை அறவிட்டுக் கொள்வதற்கான அறிவித்தலில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த தினத்திற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என பொருட்களை அடகு பிடிப்பவருக்கு அல்லது அதன் பொறுப்பினை வகிப்பவருக்கு பதிவுத் தபாலில் இறைவரி ஆணையாளரினால் அறிவிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு செலுத்தப்படாத ஏதாவது நிதி தவணை தவறிய நிதி ஒன்றாகக் கருதி அறவிடப்பட வேண்டும்.

*நிலுவை நிதியைச் செலுத்துமாறான அறிவிப்பு.*

*(2)* மேலே முதலாவது உப பிரிவின் கீழ் ஏதாவது நிதி ஒன்று தவணை தவறிய சந்தர்ப்பம் ஒன்றில் கீழே காட்டப்படும் ஏற்பாடுகளில் உள்ளபடி ஏதாவது முறையில் அந்நிதியினை அறவிட்டுக் கொள்வதற்கு முன்னர் இறைவரி ஆணையாளரினால்–

*நிலுவை நிதியினை அறவிட்டுக் கொள் வதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அறிவித்தல்.*

(அ) நிலுவை நிதி தொடர்பான விபரம் ; அத்துடன்

(ஆ) அந்நிலுவை நிதியினை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டு பொருட்களை அடகு பிடிப்பாளருக்கு அல்லது அதன் பொறுப்பினை வகிப்பவருக்கு எழுத்துமூல அறிக்கை ஒன்று அல்லது அறிவிப்பு ஒன்றை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

*நிலுவை நிதியினை அறவிடுவது தொடர்பாக எதிர்ப்பொன்றினை முன்வைக்க முடியும் என்பது.*

(3) மேலே (2) பந்தியின் கீழ் இறைவரி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிவிப்பொன்று பொருட்களை அடகு பிடிப்பவருக்கு கிடைக்கப் பெறுமிடத்து அது தொடர்பாக ஏதாவது எதிர்ப்பு காணப்பட்டால் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் பொருட்களை அடகு பிடிப்பவரினால் இறைவரி ஆணையாளருக்கு எழுத்துமூலமாக சமர்ப்பிக்க வேண்டும். அவ் எதிர்ப்பினை ஆராய்ந்து பார்த்து அது தொடர்பான முடிவினை இறைவரி ஆணையாளர் அக்கடிதம் கிடைக்கப்பெற்று இரண்டு வாரத்தினுள் பொருட்களை அடகு பிடிப்பவருக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும். அம்முடிவே இறுதியானதும் தீர்மானம் மிக்கதுமான முடிவாகும்.

*நிலுவை நிதியினை அறவிட்டுக் கொள்வதற்காக மஜிஸ்திரேட் ஒருவரின் முன் நடைபெறும் சட்ட ரீதியான செயற்பாடு.*

52. (1)“இந்நியதிச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட வேண்டிய நிலுவை நிதியினை அறவிடுவதற்காக இறைவரி ஆணையாளரினால் அல்லது அவரினால் எழுத்து மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒழுங்கான நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றத்திற்கு சான்றிதழ் ஒன்றை வழங்க வேண்டும்.”

(2) இறைவரி ஆணையாளரினால் மேலே (1) ஆவது உப பிரிவின் விடயங்களுக்காக வழங்கப்பட்ட சான்றிதழில் காணப்படும் ஏதாவதொரு தகவலில் உண்மைத் தன்மை தொடர்பாக இப்பிரிவின் கீழேயான ஏதாவதொரு வழக்கு நடவடிக்கையின் போது மஜிஸ்திரேட் அவர்களினால் வினா எழுப்புவது அல்லது விசாரணை செய்வது இடம் பெறக் கூடாததுடன், அச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியை தண்டப் பணமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(3) ஏதாவதொரு வழக்கு செயற்பாட்டின் போது தவணை தவறியுள்ள நிலுவை நிதி உரிய முறையில் கணக்கிடப்பட்டுள்ளது என மற்றும் அது செலுத்தப்படாது தவணை தவறப்பட்டுள்ளது என்பதற்கு இறைவரி ஆணையாளரின் சான்றிதழ் போதுமான சாட்சியாக வேண்டியதுடன், நிலுவை நிதி அதிகமானது என அல்லது தவறானது என அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கும் எந்தவொரு செயற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

## அத்தியாயம் XII

### பொது ஏற்பாடுகள்

*கட்டளைகளை அமுல்படுத்துதல்.*

53. (1) சட்டதிட்டங்கள் அத்துடன் /அல்லது கட்டளைகளை இந்நியதிச் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அல்லது இந்நியதிச் சட்டத்தில் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த தேவையான விடயங்கள் தொடர்பாக பின்வரும் எல்லைகளின் கீழ் சட்ட திட்டங்கள் அத்துடன் /அல்லது கட்டளைகளை அமைச்சரினால் காலத்துக்குக்காலம் தயாரிக்க இயலும்.

(2) மேலே (1) ஆவது உப பிரிவின் மூலம் கையளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு பாதிப்பொன்று இல்லாதவாறு,

(அ) பணிக்கப்பட வேண்டும் என இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிட்ட ஏதாவது விடயம் ஒன்று தொடர்பாக பணிப்புரை செய்து ; அத்துடன்

(ஆ) பொருட்களை அடகு பிடிப்பவரினால் பிணையினை வைப்பாக வைப்பதற்கு இடைநேர் விளைவான அல்லது குறை நிரப்பான ஏதாவது விடயம் ஒன்றுக்காக ஏற்பாட்டினை வழங்கி அமைச்சரினால் கட்டளைகளை தயாரிக்க இயலும்.

(3) இப்பிரிவின் கீழ் அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு விதிகளும் பிரமாணங்களும் அத்துடன்/அல்லது கட்டளைகளும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு பிரசுரிக்கப்படும் தினத்தில் இருந்து அல்லது அவ்விதிகளின் பிரமாணங்கள் அத்துடன்/அல்லது கட்டளையில் உறுதியாகக் குறிப்பிடப்படும் அதற்கு பின்னரான தினம் ஒன்றில் இருந்து அவ்விதிகள் பிரமாணங்கள் அத்துடன்/ அல்லது கட்டளைகள் நடைமுறைக்கு வர வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் தயாரிக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தில் இருந்து மூன்று மாத கால எல்லையினுள் அல்லது அக்கால எல்லையினுள் மாகாண சபைக் கூட்டமொன்று நடைபெறாத விடத்து அக்கால எல்லை நிறைவடைந்த பின்னர் நடைபெறும் முதலாவது மாகாண சபைக் கூட்டத்தில் தீர்மானிக்க அல்லது கட்டளைகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு பிரேரணை ஒன்றின் மூலம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாத ஏதாவது கட்டளை ஒன்று அந்த அனுமதி வழங்காத தினத்தில் இருந்து இல்லாதொழிக்கப்பட்டதாக கருதிக் கொள்ள வேண்டிய போதும் அக்கட்டளையின் கீழ் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒன்றுக்கு இதனால் பாதிப்பொன்று ஏற்படலாகாது.

(5) ஏதாவதொரு கட்டளை ஒன்று எத்தினத்தில் இருந்து இல்லாதொழிக்கப்பட்டது என வர்த்தமானப் பத்திரிகையினூடாக வெளியிடப்பட்ட பின்னரே இல்லாதொழிக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

54. (1) இந்நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக இறைவரி ஆணையாளரினால் ஏதாவதொரு நபருக்கு எழுத்து மூலமான அறிவிப்பொன்றினூடாக உறுதியாகக் குறிப்பிட்டு, *இறைவரி ஆணையாளரிடமிருந்து தகவல்களை கேட்டுக் கொள்ளல்.*

(அ) புத்தகங்கள், கணக்குகள், விற்பனைப் பட்டியல்கள், இருப்புப் பட்டியல்கள், ஆவணங்கள், உறுதிச் சீட்டுக்கள், அடகுத் துண்டுகள், அடகுப் புத்தகங்கள், விற்பனை அறிக்கைகள் அல்லது அந்நபரின் சொத்தில் காணப்படும் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஆவணங்களை உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையினுள் சமர்ப்பிக்குமாறு ;

(ஆ) ஏதாவதொரு தகவல் ஒன்றை வழங்குமாறு ;

(இ) ஏதாவதொரு விடயமொன்று அல்லது காரணம் ஒன்று தொடர்பாக பரிசோதித்துப் பார்ப்பதற்காக ஏதாவது இடத்தில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தினம் ஒன்றில் மற்றும் நேரத்தில் தம்மை அல்லது ஒழுங்கான முறையில் தன்னால் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர் ஒருவரை வருகை தருமாறு

பணிப்புரை செய்யலாம்.

(2) மேலே (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியின்படி தகவல்களை வழங்குமாறு அறிவிப்பொன்றின் மூலம் பணிக்கப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில், வேறு ஏதாவது எழுத்துமூலமான சட்டத்திற்கு முரணாக எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதைக் கருதாது அந்நபரினால் மேலே கூறப்பட்ட கட்டளைக்கு இணங்க செயற்படவேண்டியதுடன் இறைவரி ஆணையாளருக்கு முன்வைக்கப்பட்ட அல்லது முன்வைக்கப்பட்டிருந்த அல்லது வேறு முறையில் தமது சொத்திற்கு உட்பட்ட அல்லது உட்பட்டுள்ள ஏதாவதொரு புத்தகம், கணக்கு, விற்பனைப் பட்டியல், இருப்புப் பட்டியல், ஆவணம், உறுதிச் சீட்டு, காசோலை, ஈட்டுத் துண்டு, ஈட்டுப் புத்தகம் விற்பனை அறிக்கை அல்லது வேறு ஆவணங்களை இந்நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக தமது பொறுப்பில் சில காலத்திற்கு பாரப்படுத்தி வைப்பதற்கு அவசியமானால் அக் காலத்திற்காக தமது பொறுப்பில் பராப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். *தகவல்களை பாரப் படுத்தி வைத்துக் கொள்ளுதல்.*

55. "இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவுத் தபாலின் மூலம் அனுப்பப்படும் ஏதாவதொரு அறிவிப்பொன்று அவ்வறிப்பு தபாலிற்கு ஒப்படைக்கப்பட்ட தினத்தில் இருந்து ஏழு நாட்கள் நிறைவடைந்த தினத்தில் அவ் அறிவிப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு ஒப்படைக்கப்பட்டதாக கருதிக் கொள்ளப்பட வேண்டும்." *அறிவித்தலை ஒப்படைத்தல்.*

56. இந்நியதிச் சட்டத்தின் கீழேயான ஏதாவதொரு தவறொன்றுக்காக வழக்கொன்றினைத் தொடுப்பது இறைவரி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். *வழக்குத் தொடர்வதை வரையறை செய்தல்.*

57. இந்நியதிச் சட்டத்தின் கீழேயான விடங்களை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள் இறைவரி ஆணையாளரினால் காலத்திற்கு காலம் பணிக்கப்படலாம். அவ்வாறு பணிக்கப்படும் ஏதாவதொரு படிவம் அல்லது ஆவணத்தை காலத்திற்கு காலம் திருத்துதல் அல்லது மாற்றுதல் அல்லது அவ்வாறு பணிக்கப்பட்ட ஏதாவது படிவம் அல்லது ஆவணத்திற்கு பதிலாக வேறு ஏதாவது படிவம் அல்லது ஆவணத்தை பதிலீடு செய்தல் இறைவரி ஆணையாளரினால் மேற்கொள்ள இயலும். *படிவங்களைத் தயாரித்தல்.*

58. இந்நியதிச் சட்டத்தின் கீழ் தமது காரியத்தை மேற்கொள்ளும் போது இந்நியதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் அல்லது நியமிக்கப்பட்டவர் எனக் கருதப்படும் ஒவ்வொரு நபரும் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக அல்லது நடைமுறைப்படுத்தும் போது ஏதாவதொரு நபர் ஒருவருக்கு ஒத்துழைப்பு நல்குவதற்காக அல்லது கடமையை மேற்கொள்ளும் போது அல்லது மேற்கொண்டிருக்கும் ஒவ்வொரு நபரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தமது விடயங்களை மேற்கொள்ளும் போது ஏதாவதொரு நபர் ஒருவரின் நடவடிக்கை தொடர்பாக தமக்குத் தெரியவரும் எல்லா விடயங்கள் சம்பந்தமாகவும் இரகசியத்தைப் பேணுவதற்கு அத்துடன் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பை நல்க வேண்டும் மேலும் அவ்விடயத்திற்கு உரியதான ஏதாவதொரு நபர் ஒருவருக்கு, அந்நபருக்கு அல்லது அவரின் அதிகாரம் பெற்ற முகவர் ஒருவருக்கு, அமைச்சருக்கு அல்லது பிரதம செயலாளருக்கு அல்லது அவரின் அதிகாரம் பெற்ற நபர் ஒருவரைத் தவிர எந்தவொரு விடயத்தையும் தெரியப்படுத்தக்கூடாது இறைவரி ஆணையாளரின் சொத்தில் பொறுப்பில் அல்லது நிர்வாகத்தில் காணப்படும் எந்தவொரு ஆவணங்களையும் பெற்றுக் கொள்வதற்கு எந்த நபருக்கும் இடம் வழங்குதல் அல்லது அங்கீகாரம் வழங்குதல் கூடாது. *உத்தியோகபூர்வ இரகசியம் பேணல்.*

*அடகு பிடிப்பாளருக்குப் பதிலாக சேவையாளர் அல்லது முகவர் ஒருவரினால் நடவடிக்கை எடுக்க முடியும் என்பது.*

*59.* அடகு பிடிப்பாளரினால் மேற்கொள்ள வேண்டுமென இந்நியதிச் சட்டத்தில் பணிக்கப்பட்டுள்ள அல்லது செய்வதற்கு நியதிச் சட்டத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் ஒன்று அடகு பிடிப்பாளரின் அங்கீகாரத்தின் கீழ் அவரின் சேவகரினால் அல்லது முகவரினால் மேற்கொள்ள இயலும்.

*இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகாரம் போன்றவற்றைக் கையளித்தல்.*

*60.* இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், செயற்பாடுகள் பணிகளில் எந்தவொன்றும் இறைவரி ஆணையாளரின் கையொப்பத்துடன் எழுத்துமூலமாக அதிகாரம் வழங்கப்படும் அரச/மாகாண அரச சேவை உத்தியோகத்தர் ஒருவரினால் நடைமுறைப்படுத்த அல்லது மேற்கொள்ள இயலும்.

*சில கடை உரிமையாளர்கள் பொருட்களை அடவு பிடிப்பாளர்களாக கருதுப்பட வேண்டுமென்பது.*

*61.* ஏதாவது பொருளொன்று சில நிபந்தனைகளின் கீழ் பின்னர் மீட்டுக்கொள்வதாக அல்லது மீண்டும் விலைக்கு வாங்குவதாக தெரிவித்து அல்லது வாய்மூலமாக இணங்கி அல்லது ஏற்றுக்கொண்டு அல்லது கொடுக்கல் வாங்கலில் தன்மை மற்றும் நிலைமைக்கு ஏற்ப அவ்வாறான இணக்கம் அல்லது ஏற்றுக்கொள்ளும் தன்மையின் கீழ் அல்லது அதன்படி பொருட்களை கொள்வனவு செய்ய அல்லது விற்று வழங்கப்படும் முற்பணத்திற்கு பிணையாக பொருட்களை வைப்பதாகக் காணப்பட்டால் பயபக்தியுடன் ஏற்றுக்கொள்ளடப்பட்டமை அல்லது இணங்கியமையின் கீழ் அதன்படி பொருட்களைக் கொள்வனவு செய்வது அல்லது விற்பனைக்காக வழங்கப்படும் முற்பண நிதிக்கு வைப்பாக பொருட்களை வைத்திருப்பதற்காக வியாபார தொழில் முயற்சியை மேற்கொண்டு செல்வது பொருட்களைக் கொள்வனவு செய்து அல்லது பொறுப்பேற்று வைத்திருந்து, அதற்குப் பதிலாக ஏதாவது நிதி ஒன்றினைச் செலுத்தப்படும் அல்லது முற்பணமாக வழங்கப்படும் அல்லது கடனாக வழங்கும் ஒவ்வொரு நபரும் பொருட்களை அடவு பிடிக்கும் தொழிலினை மேற்கொண்டு செல்பவராக இந் நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக கருதிக் கொள்ளப்பட வேண்டும். [மேலும் அந்த ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் பொருள், கொடுப்பனவு, முற்பணம் அத்துடன் கடனும் இந்த நியதிச் சட்டத்தின் உள்ளடக்கப்பட்ட விடயங்களில் முறையே ஈடு ஒன்று அடகு ஒன்று, அத்துடன் கடன் ஒன்று எனக் கருதிக்கொள்ளப்பட வேண்டும்.]

*62.* இந்நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க தண்டனைக் கோவையின் ஏற்பாடுகள் உரியதாக வேண்டும்.

*63.* இந்நியதிச் சட்டம் நடைமுறைக்குவரும் தினத்திலிருந்து மேல் மாகாண மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொருட்களை அடகு பிடிப்பவர்களுக்கான நியதிச் சட்டம் இல்லாதொழிக்கப்படுகின்றது.

*இடைக்கால ஏற்பாடுகள்.*

*64.* இந்த நியதிச் சட்டத்திற்கு முரணாக எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளபோதும் -

(அ) 1942 ஆம் ஆண்டின் பொருட்களை அடகு பிடிப்பாளர்களின் கட்டளைச் சட்டத்தின் அல்லது மேல் மாகாண மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பாளர்களின் நியதிச்சட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தினுள் வழங்கப்பட்டுள்ள ஏதாவது அனுமதிப் பத்திரம் ஒன்று இந் நியதிச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றாகக் கருதப்பட வேண்டும்.

(ஆ) 1942 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பவர்களின் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது மேல் மாகாணத்தின் 2001 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பவர்களுக்கான நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட எந்தவொரு கட்டளைகளையும் அகற்றி இந் நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளைகளை அதற்குப் பதிலாக பதிலிடும் வரை அக் கட்டளைகளை இந் நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளைகளாக கருதிக் கொள்ளப்பட வேண்டும்.

(இ) 1942 ஆம் ஆண்டின் பொருட்களை அடகு பிடிப்பாளர்களின் கட்டளைச் சட்டத்தின் அல்லது மேல் மாகாண மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பாளர்களின் நியதிச்சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டு உரிய தினத்திற்கு முன்னரான தினமொன்றில் விசாரணைக்கு உட்பட்டிருந்த வழக்கொன்று அத்துடன் அவ்வாறான வழக்கொன்றில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையில் இந் நியதிச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்றாக இந் நியதிச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்கொன்றிற்காக வழங்கப்பட்ட தீர்ப்பொன்றாகக் கருதப்பட வேண்டும்.

## அத்தியாயம் XIII

பொருள் கொள்ளல்

65. சொல்லொன்று தொடர்பாக தெளிவுபடுத்தல் ஏற்பட்டால் ஒழிய இந் நியதிச்சட்டத்தில், பொருள்கொள்ளல்.

"உரிய தினம்" என்பது, இந் நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினம் என்ற கருத்தாகும்,

"இறைவரி ஆணையாளர்" என்பது, இந் நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக நியமிக்கப்பட்ட மேல் மாகாணத்தின் இறைவரி ஆணையாளர் என்ற கருத்தாகும்,

"வெளிநாட்டு கூட்டுத்தாபனம்" என்பது, இலங்கைக்கு வெளியில் கூட்டுத்தாபனம் ஆக்கப்பட்ட ஏதாவது நிறுவனம் அல்லது நபர்களைக்கொண்ட சபை ஒன்று என்ற கருத்தாகுவதுடன், இதில்

(அ) உரிய தினத்திற்குப் பின்னர் இலங்கையினுள் வியாபார நிலையம் ஒன்றை ஸ்தாபித்து; அல்லது

(ஆ) உரிய தினத்திற்கு முன் இலங்கையினுள் வியாபார நிலையம் ஒன்றை ஸ்தாபித்து உரிய தினத்தில் இலங்கையினுள் வியாபார நிலையத்தினை தொடர்ந்தும் மேற்கொண்டு செல்லும்

ஏதாவது நிறுவனம் ஒன்று அல்லது நபர்களைக் கொண்ட சபை என்ற கருத்தாகும்,

"பொருட்களை அடகு பிடிப்பவர்" என்பது பதிவு செய்யப்பட்ட வங்கியல்லாத, பொருட்களை அடகு பிடிக்கும் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் ஏதாவதொரு நபர் மற்றும் சிற்சில நிபந்தனைகளின் கீழ் பின்னர் விடுவித்துக் கொள்வதாக அல்லது பின்னர் கொள்வனவு செய்வதாக தெரிவிக்கும் அல்லது மறைமுக உடன்பாடொன்றுள்ள அல்லது வரவேற்பு அல்லது கொடுக்கல் வாங்கல் ஒன்றின் தன்மை மற்றும் இலட்சனைக்கு இணங்க அவ்வாறான இணக்கம் ஒன்று அல்லது வரவேற்பு உள்ளது என நீதியாக மறைமுக ஒப்பந்தம் என்ற வரவேற்பின் கீழ் அல்லது அதற்கிணங்க பொருட்களை கொள்வனவு செய்ய அல்லது விற்பனைக்காக வழங்கப்படும் முற்பண நிதியத்திற்கு பிணையாக பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக வியாபார நிறுவனம் ஒன்றைப் பேணிச் சென்று பொருட்களை கொள்வனவு செய்து அல்லது வைத்துக் கொண்டு அதற்குப் பதிலாக ஏதாவதொரு நிதியமொன்றினைச் செலுத்தும் அல்லது முற்பணமாக வழங்கும் அல்லது கடனாக வழங்கும் ஏதாவது நபர் ஒருவர் என்ற கருத்தாகும்.

"பொருட்களை அடகுவைப்பவர்" என்பது, பொருட்களை அடகு வைப்பதற்காக ஏதாவதொரு பொருள் ஒன்றைப் பொருட்களை அடகு பிடிப்பவருக்கு ஒப்படைக்கும் நபர் என்ற கருத்தாகும்.

"இலங்கைப் பிரஜை" என்பது, பிரஜைக்கு உரியதாக தற்காலத்தில் காணப்படும் சட்டதிட்டங்களின் கீழ் இலங்கைப் பிரஜை ஒருவரான நபர் என்ற கருத்தாகும்.

"மாவட்டம்" என்பது, நிர்வாக மாவட்டம் என்ற கருத்தாகும்,

"வெளிநாட்டு வியாபார தாபனம்" என்பது –

(அ) இரண்டு பங்காளிகளைக் கொண்ட தொழில் ஒன்றாயின் அதில் ஒரு பங்காளி அல்லது பங்காளிகள் இருவரும் இலங்கைப் பிரஜைகள் அல்லாத ; அல்லது

(ஆ) இரண்டு பங்காளிகளுக்கு அதிகமானவர்களைக் கொண்ட வியாபாரம் ஒன்றாயின் அவர்களில் ஆகக் குறைந்தது ஒரு பங்காளி இலங்கை பிரஜை அல்லாத தொழில் தாபனம் ஒன்று

என்ற கருத்தாகும்,

"மாதம்" என்பது, இலாபம் அல்லது வட்டியினை அறவிட்டுக்கொள்ளும் விடயம் ஒன்றாகுமிடத்து, முப்பது நாட்கள் என்ற கருத்தாகும்,

''பஞ்சாங்க வருடம்'' என்பது, ஒவ்வொரு வருடமும் தை மாதம் முதலாந் திகதி தொடங்கி மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதி முடிவடையும் கால எல்லை என்ற கருத்தாகும்.

''நிதி ஆண்டு'' என்பது, ஒவ்வொரு வருடத்தினதும் ஏப்பிறல் மாதம் முதலாந் திகதி ஆரம்பமாகி அடுத்த வருடத்தின் மாச்சு மாதம் முப்பத்தோராம் திகதி நிறைவடையும்கால எல்லை என்ற கருத்தாகும்.

''நபர்'' என்பது, ஏதாவது தனி நபர் ஒருவர் அல்லது தனிப்பட்ட சபை ஒன்று, தனிப்பட்ட சபை கூட்டுத்தாபனம் ஆயின் அக் கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும், வியாபார தாபனம் ஒன்றாயின் அவ் வியாபார தாபனத்தின் எல்லா பங்குதாரர்களும் வியாபாரத் தாபனம் ஒன்றல்லாத கூட்டுத்தாபனமல்லாத தாபனம் ஒன்றாயின் அதன் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய அத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் என்ற கருத்தாகும்.

''அடகு'' என்பது, அடகு பிடிப்பாளர் ஒருவருக்கு அடகு வைக்கப்பட்ட பொருள் என்ற கருத்தாகும். - ''உறுதிப் பத்திரம்'' என்பது, வியாபார நிறுவனத்தை ஒப்படைப்பதற்குரியதாக வேறு நபர் ஒருவருடன் கையொப்பமிடும் ஆவணம் என்ற கருத்தாகும்.

''அமைச்சர்'' என்பது, மேல் மாகாண மாகாண சபையின் நிதி விடயப்பொறுப்பு அமைச்சர் என்ற கருத்தாகும்,

''மாகாண சபை'' என்பது, மேல் மாகாண மாகாண சபை என்ற கருத்தாகும்,

''பிரதம செயலாளர்'' என்பது, மேல் மாகாண சபையின் பிரதம செயலாளர் என்ற கருத்தாகும்,

''மாகாண சபை நிதியம்'' என்பது, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 19 ஆவது பிரிவின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மேல் மாகாண மாகாண சபை நிதியம் என்ற கருத்தாகும்.

''வியாபார ஸ்தாபனம்'' என்பது, வாசஸ்தலம் ஒன்று, குதம் ஒன்று, கடை ஒன்று, வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்று, கூட்டு வியாபாரம் ஒன்று, இணைந்த வியாபாரம் ஒன்று, வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லும் ஏதாவது நிலையம் ஒன்று அத்துடன் மேலே குறிப்பிடப்பட்ட யாவற்றினதும் கிளையொன்றாக நடாத்தப்படும் ஏதாவதொரு நிலையம் ஒன்று என்ற கருத்தாகும்,

''அரைகுறையாக முடிவுற்ற பொருள்'' என்பது/ஏதேனும் ஒரு பொருள் உற்பத்தி செய்து கொண்டிருக்கும் நிலையில் அல்லது உற்பத்திசெய்து முடிவுறாத பொருள், ஒரு பொருள் இல்லாத திரவங்கள் பல அல்லது அவற்றைப் பயன்படுத்தும் அல்லது அவற்றை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் பொருள் அல்லது செய்து முடிவுற்ற பொருள் பல திரவங்களை ஒன்றாகக் கலந்த ஒரு பொருள் அல்லது உற்பத்தி செய்து குறையில் இருக்கும் ஒரு பொருள் அல்லது உற்பத்தி செய்யத் தயாராக இருக்கும் ஒரு பொருள் என்ற கருத்தாகும்.

''நிலுவை நிதி'' என்பது, இந் நியதிச்சட்டத்தின் கீழ் அறவிடப்பட வேண்டிய அல்லது செலுத்தப்பட வேண்டிய நிதியில் தற்போது செலுத்தப்படாமல் உள்ள நிதி என்ற கருத்தாகும்.

''தவணை தவறிய நபர்'' என்பது, இந் நியதிச் சட்டத்தின் மூலம் மேற்கொள்வதற்கு பணிக்கப்பட்டுள்ள விடயங்ளை மேற்கொள்ளாது இருக்கும் அத்துடன்/அல்லது மேற்கொள்ள வேண்டாம் என பணிக்கப்பட்டிருக்கும் காரியங்களை மேற்கொள்ளும் ஏதாவதொரு நபர் ஒருவர் என்ற கருத்தாகும்.

''பின் உரித்தாளி'' என்பது, மரணமெய்திய நபர் ஒருவரின் பின்உரித்தாளி அல்லது உரித்தாளி என்ற கருத்தாகுவதுடன்-

(அ) மரணமெய்திய நபரினது சொத்துக்களின் உரிமையினைப் பெற்றுக்கொள்ளும் அல்லது அது சம்பந்தமாக மத்தியஸ்தம் வகிக்கும் ஏதாவது நபர் ஒருவர் ;

(ஆ) மரணமெய்திய நபர் ஒருவரின் சொத்து தொடர்பாக நீதிமன்ற அதிகாரம் உள்ள அனுமதிப்பத்திரம் அல்லது பின்உரித்தாளி அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் அல்லது மீண்டும் பதிப்புச்செய்வதற்காக மாவட்ட நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ள அல்லது வேண்டுகோள் விடுக்க அதிகாரம் உள்ள ஏதாவது நபர் ஒருவர் ;

(இ) பொறுப்பில் உள்ளவரினது இறுதி விருப்ப பத்திரத்தின் மூலம் உருவான பொறுப்பாளர் ஒருவர் ;

(ஈ) இந் நியதிச்சட்டத்தின் 43(1) ஆவது பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்படும் பிணைப்பொன்று உள்ளடங்கலாக உறுதிப்பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர் ஒருவரும்.

இதற்கு உட்படுகிறார்,

"அதிகாரம் பெற்ற முகவர் ஒருவர்" என்பது,

இந் நியதிச்சட்டத்தின் விடயங்களுக்காக ஏதாவது ஒரு நபருக்குப் பதிலாகச் செயற்பட அந் நபரினால் ஆவணம் ஒன்றின் மூலம் அதிகாரம் வழங்கப்படுபவரான அத்துடன்,

(அ) நபர் ஒருவர் சம்பந்தப்படுமிடத்து அந்த நபரினது உறவினர் ஒருவரான ;

(ஆ) பங்கு வியாபாரமான விடத்து, அந்த பங்கு வியாபாரத்தின் பங்குதாரர் ஒருவரான ;

(இ) கூட்டுத்தாபனமொன்றாகுமிடத்து, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் அல்லது செயலாளர் ஒருவரான;

(ஈ) நபர்களைக்கொண்ட சபை தொடர்பான விடத்து அந்த நபர்களைக் கொண்ட சபையின் அங்கத்தவர் ஒருவரான;

(உ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர் ஒருவரான;

(ஊ) சட்டத்தரணி ஒருவரான ;

நபர் என்ற கருத்தாகும்.

"உடல் உள பாதிப்பிற்கு உட்பட்ட நபர்" என்பது, சிறு பராயத்தை உடைய ஒருவர், உளத்தாக்கத்திற்கு உட்பட்டவர், சுயபுத்தி இல்லாதவர் என்ற கருத்தாகும்.

"பதிவுசெய்யப்பட்ட வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் வங்கிச் சட்டத்தின் பொருள்கொள்ளளுக்கு இணங்க அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட வங்கி ஒன்று என்ற கருத்தாகும்,

"முக்கிய பங்குதாரர்" என்பது, இலங்கையில் வசிக்கும் நேரடியான பங்குதாரர்களுள்-

(அ) பங்கு வியாபார உடன்படிக்கையில் முதலாவதாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ;

(ஆ) அவ்வாறான உடன்படிக்கை ஒன்று இல்லாதவிடத்து பங்கு வியாபாரத்தின் பொதுவான பெயர் பட்டியலில் தனிமையாக அல்லது ஏனைய பங்குதாரர்களுள் முன்னுரிமையாக பெயரில் அல்லது ஆரம்ப எழுத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ;

(இ) 1987 ஆம் ஆண்டின் வியாபார பெயர் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் தெரிவிக்கப்படும் தகவலில் முதலாவதாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பங்குதாரர் என்ற கருத்தாகும்.

"பொறுப்பாளர்" என்பது, ஏதாவது ஒரு பொறுப்பாளர், பாதுகாப்பாளர், சொத்து பாதுகாப்பாளர், முகாமையாளர் அல்லது ஏதாவது ஒரு நபருக்குப் பதிலாக ஏதாவது சொத்தொன்றின் இயக்கமொன்று, நிர்வாகம் அல்லது முகாமைத்துவத்திடம் காணப்படும் வேறு நபர் ஒன்று என்ற கருத்தாகும்.

66. இந் நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படுமிடத்து அவ்வேளையில் சிங்களமொழி மூலமான பதமே அதிகாரம் பெற வேண்டும். ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழியே அதிகாரம்பெற வேண்டும்.

**முதலாவது அட்டவணை** 4 ஆவது பிரிவு

படிவம் "அ"

**அனுமதிப்பத்திரம்**

இலக்கம்.................................

மேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் ...............................................................ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிக்கும் நியதிச் சட்டத்தின் 4 ஆவது பிரிவிற்கு இணங்க மேல் மாகாண மாகாண சபையின் இறைவரி ஆணையாளரான நான், அந் நியதிச்சட்டத்தின் மூலம் எனக்கு ஒப்படைக்கப்பட்டு உள்ள அதிகாரத்திற்கு இணங்க .................... ஆகிய ஸ்தானத்தில் பொருட்களை அடகுபிடிக்கும் தொழில் முயற்சியை நடாத்துவதற்காக .................................................. இல் வசிக்கும் திரு./திருமதி/தாபனம் ...................................................................
இற்கு மேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் .................................. ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிக்கும் நியதிச்சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் இத்தால் அதிகாரம் அளித்து அனுமதிப் பத்திரத்தை வழங்குகின்றேன். இவ் அனுமதிப்பத்திர காலம் .................. 12.31 ஆந் திகதி முடிவடையும்.

............................................................
மாகாண இறைவரி ஆணையாளர்/பதிலாக

திகதி: .........................

(17 ஆவது பிரிவு)

படிவம் "ஆ"

**ஈட்டுப் புத்தகம்**

............................ இன் பொருட்களை ஈடு பிடிப்பவராகி ......................... உடைய ஈட்டுப் புத்தகம்

| ஈட்டுத்துண்டின் இலக்கமும் திகதியும் | மாதத்தின் ஈட்டு உடன்படிக்கையின் எண் | ஒவ்வொரு பொருளுக்கும் கொடுக்கப்பட்ட கடன் தொகை | ஒவ்வொரு பொருளுக்கும் இணங்கிய வட்டி வீதம் | ஈடு வைப்பவரின் பெயர் | ஈடு வைப்பவரின் விலாசம் | ஈடு வைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளின் விபரம் | ஈடுவைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளின் பெயர் அதன் நிறை மற்றும் காரட்டின் அளவு | ஈடுவைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளினதும் பெறுமதி | மீட்கப்படும் திகதி | மீட்பவரின் பெயரும் விலாசமும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. ச. | | | | | | ரூ. ச. | | |

(17 ஆவது பிரிவு).

படிவம் "இ"

**ஈட்டு உடன்படிக்கை விற்பனைப் புத்தகம்**

விற்பனை செய்யப்பட்ட இடமும் திகதியும் :...................................................................................................................
ஏலம் இடுபவரின் பெயரும் விலாசமும் :.........................................................................................................................

| ஈட்டு உடன்படிக்கைப் புத்தகத்திலுள்ளவாறு உடன்படிக்கையின் இலக்கம் | ஈடு வைக்கப்பட்ட திகதி | ஈடு வைத்தவருடைய பெயர் | கடன் தொகையின் அளவு | அறவிட வேண்டிய வட்டியின் அளவு | ஏல விற்பனைக்காரர் ஒவ்வொரு ஈட்டினையும் விற்ற விலை | கொள்வனவு செய்த நபவரின் பெயரும் விலாசமும் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | |

(18 ஆவது பிரிவு).

படிவம் "ஈ"

ஈட்டுத் துண்டு

அனுமதிப்பத்திர இல.:..................

இலக்கம் :...........................................

திகதி: ................................................

இங்கு கீழே கையொப்பம் இட்டுள்ள ................................................. (பொருட்களை அடகு வைப்பவரின் முகவரி) இல் வசிக்கும் ............................................. தேசிய அடையாள அட்டை இலக்கம்/ கடவுச் சீட்டு இலக்கத்துக்குரிய....................... (பொருட்களை அடகு வைப்பவரின் பெயர்) இனால்...................................... (பொருட்களை அடகு பிடிப்பவரின் முகவரி) இல் அமைந்துள்ள.............................................. (பொருட்களை அடகு பிடிப்பாளரின் பெயர்) க்குப் பதிலாக................................ (பொருட்களை அடகு பிடிப்பவர் அல்லது அவரின் முகவரின் பெயர்) க்கு தற்போதைய விற்பனையின் பெறுமதி ரூபா:........................க்கு...................................... (பொருளின் தன்மை) ரூபா நிதியிற்கு......................... இன்றைய தினம் அடகு வைக்கப்பட்டது.

.................................................
பொருட்களை அடகு பிடிப்பவர் அல்லது
அவரது சேவகரின் அல்லாவிடின் முகவரது கையொப்பம்.

..........................................
பொருட்களை அடகு வைப்பவரது
கையொப்பம்.

............................
தேசிய அடையாள அட்டை இலக்கம்.

..............................................................................................................................................................................

(பொருட்களை அடகு வைப்பவர் ஈட்டினை மீட்டுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் இதில் கையொப்பம் இட வேண்டும்)

மேலே குறிப்பிடப்பட்ட பொருட்கள் என்னால் அதற்குரிய மொத்த நிதி மற்றும் வட்டி செலுத்திய பின்னர் மீண்டும் எனது ஆதனத்தை பெற்றுக் கொண்டேன்.

...............................................
பொருட்களை அடகு வைப்பவரது கையொப்பம் மற்றும் திகதி.

(28 ஆவது பிரிவு )

படிவம் "உ"

**பற்றுச்சீட்டு**

அனுமதிப்பத்திர இல.: ..................................

இலக்கம்........................ ஆகிய ஈட்டுக்காக வழங்கப்பட்ட கடன் நிதியான ரூபா...................... நிதி மற்றும் அந் நிதிக்கு 20........../ ............/................ தொடக்கம் 20................/....................../...................... வரையிலான வட்டி ஆகிய ரூபா.................... நிதியும் வரி நிதியாக ரூபா......................... உம் ஆக மொத்தம் ரூபா........................ நிதியைப் பெற்றுக் கொண்டேன்.

கையொப்பம் ............................................
பெயர் ............................................
தாபனத்தின் பெயர் ...................................
மற்றும் முகவரி
(முத்திரை)

திகதி :...................................

(15 (2) 18 (2) அத்துடன் 19 ஆவது பிரிவு

**இரண்டாவது அட்டவணை**

வட்டி வீதம் :

கடனாகக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாவிற்கும் அல்லது ரூபாவின் பகுதிக்கு வட்டி வீதம் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது மாதத்தின் பகுதிக்கும் இரண்டு சதவீதத்திற்கு மேற்படலாகாது.

வரியினைச் செலுத்துதல் :

ஈட்டு உடன்படிக்கையின் மீது கொடுக்கப்படும் கடனுக்காக பொருட்களை அடகு வைப்பவர் எழுத்து மூலச் சட்டத்தின் கீழ் ஆன வரி செலுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில் அந்த வரியை ஈடுபிடிப்பவரினால் அவரிடமிருந்து அறவிட்டுக் கொள்ள முடியும்.

அளவுக்கு மிகுதியான வட்டி அறவிடுவதை வரையறுத்தல் :

ஈட்டு உடன்படிக்கை ஒன்று தொடர்பாக வழங்கப்படும் கடனுக்குப் பதிலாக பொருட்களை அடவு பிடிப்பவர் அடவு வைக்கும் தினத்தில் இணங்கும் வட்டி சதவீதம் அன்றைய தினத்தில் இருந்து இருபத்திநான்கு மாத காலம் செல்லுபடியானதாகும். அந்த இருபத்தி நான்கு மாதகாலத்தினுள் ஏதாவது வட்டி அதிகரிப்பு ஒன்று இடம் பெற்றால் அந்த வட்டி அதிகரிப்பினை அந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு உரியதாக்கிக் கொள்ள முடியாது.

அந்த ஈட்டுத் துண்டுக்குரிய ஈட்டு உடன்படிக்கையை அதனை அடகு பிடித்த திகதியிலிருந்து இருபத்திநான்கு மாத காலத்தினுள் மீட்கப்படாவிடின் அவ் ஈட்டு உடன்படிக்கையை பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முடியும்.

அவ்வாறு விற்பனை செய்யும் பொழுது ஏதேனும் மேலதிக இலாபம் ஏற்படின் அந்த இலாப நிதி அடவு பிடிப்பாளரினால் அடவு வைத்தவருக்கு செலுத்த வேண்டும்.

29 ஆவது பிரிவு

**மூன்றாவது அட்டவணை**

ஈட்டு உடன்படிக்கையை விற்பனை செய்வது பற்றிய கட்டளைகள்

1. ஏலத்தில் விடப்படும் சகல ஈட்டு உடன்படிக்கைகளும் பொதுமக்கள் பார்த்து அறிந்து கொள்வதற்காக ஏல விற்பனை செய்பவர் அந்த ஏல விற்பனை ஆரம்பமாக ஆகக் குறைந்தது இரண்டு மணித்தியாலயத்திற்கு முன் வெளிப்படையாக வைத்திருத்தல் வேண்டும்.

2. ஈட்டு உடன்படிக்கை சம்பந்தமாக பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தும் பெயர் பட்டியல் ஒன்றினை ஏல விற்பனை செய்பவர் பகிரங்கப்படுத்தல் வேண்டும்.

   (அ) ஈடுபிடிப்பவரின் பெயரும் வர்த்தக நிலையமும் ;

   (ஆ) அவ் ஈடு வைக்கப்பட்ட மாதம் ;

   (இ) ஒவ்வொரு ஈடு வைக்கப்பட்ட தருணத்தில் ஈட்டு புத்தகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வகையில் ஒவ்வொரு ஈட்டு உடன்படிக்கையின் எண்.

3. உரிய ஏலத்தினை அடகு பிடிப்பவரின் வியாபாரம் அமைந்துள்ள சுற்றாடலில் நடாத்த வேண்டும்.

4. விற்பனை சம்பந்தமாக அறிவித்தலை ஏல விற்பனையாளர் ஆகக் குறைந்தது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்தி பத்திரிகை மூன்றில் ஒரு முறையாவது வெளியிடப்பட வேண்டும் மேலும் விற்பனை நடைபெறவிருக்கும் பகுதியில் பொதுமக்கள் சேருகின்ற இடங்களில் அது சம்பந்தமாக அறிவித்தலை காட்சிப்படுத்தல் வேண்டும். மேலும் அவ்வகையான அறிவித்தல்களில் கீழ்க் காணும் விபரங்கள் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(அ) பொருட்களை அடகு பிடிப்பவரின் பெயரும் வியாபார ஸ்தாபனமும் ;

(ஆ) உரிய ஏலம் நடைபெறும் தினம், நேரம், இடம் மற்றும் ;

(இ) எந்த கால எல்லையினுள் ஈடுவைக்கப்பட்டு மீட்கப்படாத ஈடு அந்த ஏலத்திற்கு உட்பட்டுள்ளது என்பது தொடர்பாக.

5. மேலே 4 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்படும் அறிவிப்பு உரிய ஏலம் நடைபெறவுள்ள நாளுக்கு 7 நாட்களுக்கு முன்னரான ஞாயிறு தினம் அத்துடன் /அல்லது அத்தினத்தில் இருந்து பிரசுரிக்கப்பட வேண்டும்.

6. விற்கப்பட்ட தினத்திலிருந்து பதிநான்கு நாட்களுக்குள் அந்த ஏலத்தின் போது விற்கப்பட்ட பெயர்ப்பட்டியலின் பிரதி ஒன்று அல்லது அந்த பொருட்கள் அடவு பிடிப்பாளரின்ஈட்டினை விற்ற நிதியின் அளவை உள்ளடக்கி ஏலமிடுபவரின் கையொப்பம் இட்டு அது உண்மையென உறுதிப்படுத்தி அதனை பொருட்கள் அடவு பிடித்தவருக்கு ஏலமிடுபவரினால் ஒப்படைக்கப்பட வேண்டும்.

7. பொருட்களை அடகு பிடிப்பவர் அவ் ஏலவிற்பனையின் பின்னர் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களுக்காவது அப்பெயர்ப் பட்டியல்களைப் பத்திரமாக வைத்துக் கொள்ளல் வேண்டும்.

7 - 900

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.